பக்கங்கள்: 11

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 07 வள்ளுவர் ஆண்டு 2054 ஐப்பசி 11 சனிக்கிழமை 28.10.2023 கதிர் 351

# அம்பிட்டிய சுமண தேரரை உடனடியாகக் கைது செய்

## முறைப்பாடுகள் குவிகின்றன



மட்டக்களப்புமாவட்டம்மயிலத்தமடு மாதவனையில் சிங்களவர்களால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள பகுதியில் வைக்கப்பட்டுப் பின்னர் அகற்றப்பட்ட புத்தர் சிலையைப் பார்வையிட பொலிஸார் தனக்கு அனுமதி வழங்க மறுத்ததை அடுத்து அம்பிட்டிய சுமண ரத்ன தேரர் தமிழர்கள் அனைவரையும் கொல்வோம் என்று இனவாதத்தைக் கக்கிய காணொலி சமூக வலைத் தளங்களில் தீவிரமாகப் பரவியதை அடுத்து அவரைக் கைது செய்யும்படி முறைப்பாடுகள் குவிகின்றன. எனினும் நேற்றிரவு வரை அவர் கைது செய்யப்படவில்லை.

மாதவனையில் முன்னாள் கிழக்கு மாகாண ஆளுநர் அனுராத ஜஹம்பத் மற்றும் அம்பிட்டிய சுமணரத்ன ☞ 2

## இது ரகசியம் அல்ல!

இலங்கை வந்த ஷி யான் 6 சீன ஆய்வுக் கப்பல் திட்டமிட்டபடி தனது ஆய்வினை மேற்கொள்வதற்கான அனுமதிகள் அனைத்தும் இன்று வழங்கப்படும் என்று தெரிவிக்கின்றது. இந்தக் கப்பல் தனக்குத் தேவையான எரிபொருள் மற்றும் உணவு வகைகளை ஏற்றிக்கொள்வதற்காகவே கொழும்புத் துறைமுகத்தை வந்தடைந்துள்ளது என்றும் அதற்கு மட்டுமே அனுமதி வழங்கப்பட்டதாக அயலுறவுத்துறை அமைச்சர் தெரிவித்தது. அது உண்மையும்கூட, ஏனெனில் அயலுறுறவுத்துறை அமைச்சால் அதற்கு மட்-டுமே அனுமதி வழங்க முடியும். கடல் ஆய்வுக்கான அனுமதியைப் பாதுகாப்பு அமைச்சே வழங்கவேண்டும். இப்போது அந்த அனுமதிக்காகக் அயலுறவுத்துறை அமைச்சு காத்திருக்கின்றது. இன்று அனேகமாக அந்த அனுமதி வழங்கப்பட்டுவிடும்.

இந்தக் கப்பல் 10 நாள்கள் ☞ 2

## கடல் ஆய்வுக்கான அனுமதிகள் ஷி யானுக்கு இன்று கிடைக்கும்



(நடராசா லோகதயாளன்.)

இலங்கை வந்த சீன ஆய்வுக் கப்பலான ஷி யான் 06 கடலில் தனது ஆய்வுப் பணிகளைத் ☞ 2

## மட்டக்களப்புப் பொலிஸில் தமிழ் உணர்வாளர் முறையீடு

அம்பிட்டியதேரர்தமிழர்கள் மீதான இனவன்முறைகளை தூண்டும் விதமாக வெளியிட்ட கருத்துக்கள் தொடர்பாக மட்டக்களப்பு மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் காரியாலயத்தில் தமிழ் உணர்வாளர்கள் அமைப்பு தலைவர் கணபதிப்பிள்ளை மோகன் முறைப்பாடு செய்துள்ளார்.

மட்டக்களப்புமாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் காரியாலயத்திற்கு நேற்றையதினம், சென்ற தமிழ் உணர்வாளர்கள் அமைப்பு தலைவர் கணபதிப்பிள்ளை மோகன் அம்பிட்டிய தேரர் இனங்கள், ☞ 2

## சிஐடியிலும் முறைப்பாடு

அம்பிட்டிய சுமண தேரரை உடனடியாக கைதுசெய்யுமாறு குற்றப்புலனாய்வு திணைக்களத்தில் (சிஐடி) முறைப்பாடொன்றை கையளித்துள்ள வடக்கு, கிழக்கு மக்கள் போராட்டத்துக்கான ஆதரவு இயக்கத்தின் செயற்பாட்டாளர் ராஜ்குமார் ராஜீவ்காந் தமிழ் மக்களை வெட்டிக் கொலை செய்யப்போவதாக தேரர் மிரட்டியமைக்கான காணொளி ஆதாரத்தையும் கையளித்துள்ளார்.

குற்றப்புலனாய்வு திணைக்களத்துக்கான கடிதத்தில் ராஜ்குமார் ராஜீவ்காந் தெரிவித்துள்ளதாவது:

அம்பிட்டிய ☞ 2

## பொலிஸ் மா அதிபருக்க் கடிதம்

வன்முறை மற்றும் இன மற்றும் மத வெறுப்புணர்வைத் தூண்டுவதை நோக்கமாகக் கொண்டு அம்பிட்டிய சுமண தேரரால் அண்மையில் வெளியிடப்பட்ட கருத்துத் தொடர்பாகப் பொலிஸ் மா அதிபர் சி.டி.விக்கிரமரட்னவுக்கு இலங்கை தமிழரசுக் கட்சியின் ஊடகப் பேச்சாளரும் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன் அவசர கடிதமொன்றை அனுப்பியுள்ளார்.

நேற்றையதினம் அனுப்பி வைக்கப்பட்ட கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

கடந்தசிலநாட்களாக மங்களராமய அம்பிட்டிய சுமண தேரரின் பகிரங்கமான அறிக்கைகள் ஊடகங்களில் மிக அதிக அளவில் விளம்பரப்படுத்தப் பட்டதை உங்கள் கவனத்திற்கு கொண்டு வர ☞ 2

## கைத்தொழில் துறைக்காக ஒரு வீத காணி ஒதுக்கீடு

இலங்கையில் கைத்தொழில் துறைக்காக ஒதுக்கப்பட்டுள்ள காணிகளின் அளவு மிகவும் குறைவாக இருப்பதால், நாட்டின் மொத்த நிலப்பரப்பில் ஒருசதவீத பகுதியை கைத்தொழில் துறைக்காக ஒதுக்குவதே எமது இலக்கு என்று கைத்தொழில் மற்றும் சுகாதார அமைச்சர் வைத்தியர் ரமேஷ் பதிரண தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று செய்தியாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

கடந்த காலங்களில் ஏற்பட்ட கொரோனா மற்றும் பொருளாதார நெருக்கடி ☞ 2

### கண்ணீர் புகை மற்றும் நீர்த்தாரை மூலம்

## மாணவர் பேரணி மீது நேற்று கடும் தாக்குதல்



மருத்துவ பீட மாணவர் செயற்பாட்டுக் குழுவின் எதிர்ப்புப் பேரணியைக் கலைக்க பொலிஸார் இரண்டு தடவைகள் நீர்த்தரை மற்றும் கண்ணீர் புகை தாக்குதல்களை மேற்கொண்டமையால் பதற்றமான நிலை ஏற்பட்டது.

கொழும்பு புதிய நகர மண்டபத்திற்கு முன்பாக நேற்று ஒன்றுகூடிய மருத்துவபீட மாணவர்கள், மருத்துவக் கல்வியை தனியார் மயமாக்குவதற்கு எதிர்ப்பு தெரிவித்து பெரும் கண்டன ஆர்ப்பாட்டப்பேரணியை முன்னெடுத்தனர்.

விசேட அதிரடிப்படையினர் மற்றும் ☞ 2

## அமைச்சர் டக்ளஸ்க்கு எதிராக மீனவர்கள் ஐ.நாவிடம் முறையீடு

### ஊடகங்கள் மூலம் பகிரங்கமாக செய்யப்பட்டது

ந.லோகதயாளன்.

இலங்கையின் கடற்றொழில் அமைச்சின் சட்டவிரோதமான செயற்பாடுகள் மற்றும் சீனாவோடு இணைந்து கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா முன்னெடுத்துவரும் செயற்பாடுகள் தங்களது வாழ்வாதாரத்தை அழித்து இருப்பையும் இல்லாதொழிக்கும் வகையில் அமைந்துள்ளதாக குற்றஞ்சாட்டும் வடக்கு மாகாண மீனவர்கள் தம்மை அழிவில் இருந்து காப்பாறுமாறு ஐ.நாவதிவிடப்பிரதிநிதியிடம் கோரிக்கை விடுத்துள்ளனர். ஊடகங்கள் மூலம் மீனவர் பிரதிநிதி இந்தக் கோரிக்கையை விடுத்தார்.

யாழ். வடமராட்சி ஊடக இல்லத்தில் செய்தியாளர்களைச் சந்தித்த வட மாகாண கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசங்களின் சம்மேளனத்தின் முன்னாள் தலைவர் அன்னலிங்கம் அன்னராசா இதனைத் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

இலங்கையின் கடற்றொழில் அமைச்சர் கடந்த வாரம் ஐ.நா. வதிவிடப் பிரதிநிதியைச் சந்தித்து இந்திய இழுவைப்படகுகளால் வடக்கு கடற்றொழில் சமூகம் பாதிக்கப்படுகிறது. அதனை தடுத்து நிறுத்த இந்திய மீனவர் பிரச்சினையில் ஐ.நா தலையிட்டு தீர்வுகாண வேண்டும் என மனு ஒன்றை கைளித்துள்ளார்.

அதனை நாங்கள் ☞ 2

## பாடசாலைகளுக்கு முன்னால் கூடி அதிபர், ஆசிரியர்கள் போராட்டம்



யாழ்ப்பாணத்தில் நடந்த போராட்டம்

அதிபர், ஆசிரியர் சங்கங்கள் கூட்டாக நடத்திய போராட்டத்தின் மீது தாக்குதல் நடத்தப்பட்டமை தொடர்பில் கண்டனங்களை வெளியிட்டு ☞ 2

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

ஆய்வில் ஈடுபட முன்னர் திட்டமிடப்பட்டது. ஆனால் இந்தியாவின் கடும் எதிர்ப்பைச் சமாளிக்கும் உத்தியாக 5 நாட்களுக்குமட்டுமே ஆய்வுக்கான அனுமதியை வழங்குவதற்கு இப்போது தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதற்கு கப்பலில் உள்ளவர்களும் இணங்கியுள்ளானர் என்று தெரிகின்றது. அதனால் கப்பலில் உள்ளவர்களுக்குப் பாதகம் ஒன்றும் இல்லை. அவர்கள் 10 நாள் பணிகளையும் ஐந்தே நாட்களில் முடித்துவிடுவர் என்று கப்பலைப் பற்றி நன்கு அறிந்த ஒருவர் தெரிவித்தார்.

இந்தக் கப்பலின் வரவேற்பு நிழக்வில் ஊடகவியலாளர்கள், வளிமண்டலவியல் திணைக்கள அதிகாரிகள், நாரா அதிகாரிகள், றுகுணு பல்கலைக்கழம் மற்றும் சமுத்திரவியல் பல்கலைக் கழகம் உள்ளிட்டவற்றின் பிரதிநிகள் எனப் பலரும் நிகழ்வில் கலந்து கொண்டிருந்தனர்.

இந்த நிலையில் தரித்து நிற்கும் கப்பலிற்கு தேவையான உணவு எரிபொருளும் நேற்று நிரப்பி முடிக்கப்பட்டுள்ளது.

90.6 மீற்றர் நீளமும் 17 மீற்றர் அகலம் கொண்ட 260 தொன் நிறை கொண்ட, ஆராய்ச்சி உபகரணங்களைச் சுமந்து நிற்கும் இந்த ஆய்வுக் கப்பலில் 60 சீன விஞ்ஞானிகள் உள்ளனர். ஆய்வில் ஈடுபடும் 5 தினங்களும் 8 மணி நேரத்திற்கு ஒரு ஷிவ்ட் பிரித்து தினமும் 3 சுற்று ஆய்வுகளை மேற்கொண்டு 10 நாள் பணிகளை ஐந்தே நாட்களில் முடித்துவிட அவர்களால் முடியும் என்கிறார் அவர்.

ஷி யான்6 மேற்கொள்வது இலங்கையின் காலநிலையை முன்கூட்டியே அறிந்து கொள்வதற்கான நீரின் மேலான ஆய்வு எனக் கூறுவதுபோன்று நீரின் மேலான ஆய்வுகள் உலகம் முழுவதும் இடம்பெறுவது வழமை அதுமட்டுமன்றி ஆய்வு இடம்பெறும் நாடுகளிற்கு அண்டை நாடுகள் எதிரி நாடுகள் என்றாலும் அச்சம்கொள்வது கிடையாது மாறாக நிலத்தின் கீழான நிலப்படுக்கை தொடர்பில் ஆய்வு இடம்பெறுமானால் அது பலரையும் ஐயம்கொள்ளவைக்கும்.

இதனால்தான் சீனா நிலப்படுக்கை ஆய்வில் ஈடுபட்டுவிடுமோ என இந்தியா மற்றும் அமெரிக்கா அஞ்சுகின்றன. அந்த அச்சத்திற்கு இலங்கை அரசின் மாறுபட்ட கருத்துக்கள் அல்லது திடமற்ற கூற்றுக்களே பிரதான காரணமாக அமைகின்றதாகவும் சுட்டிக் காட்டப்படுகின்றது.

ஒக்டோபர் மாதம் 25 சீனக்கப்பல் வரவேவராது என அயலுறவுத்துறை அமைச்சர் அலி சப்ரி கூறியும் கப்பல் வந்துவிட்டது. தற்போது ஆய்விற்கு அனுமதி இல்லை எனக்கூறிவிட்டு அந்த அனுமதியை வழங்குவதில் வந்து நிற்பதனால் நிலப்படுக்கை ஆய்வு இல்லை என்ற கூற்றுமட்டும் எப்படி உண்மையாக இருக்கும் என அயல்நாடும் அமெரிக்காவும் வினாவுவதனை எவராலும் மறுக்க முடியவில்லை.

இதேநேரம் இந்தக் கப்பலில் ஆய்விற்குச் செல்லும் இலங்கை விஞ்ஞானிகள் முதல் கடற்படையினர் வரையும் அணியும் உடையும் வழங்கப்பட்டு விட்டதாகவே தெரிகின்றது.

இவை அனைத்திற்கும் அப்பால் இலங்கை விஞ்ஞானிகளும் இலங்கை கடற்படையினரும் ஆய்வின்போது ஏற்றிச் செல்லப்பட்டாலும் 5 நாள் நிறைவின் பின்பு இவர்களை மீண்டும் துறைமுகம் அழைத்து வந்து இறக்கிய பின்பு வெளியேறும் சமயம் இந்தக் கப்பல் கடலடி ஆய்வில் ஈடுபடுமா இல்லையா என்பதற்கும் எந்த அதிகாரிகளிடமும் உறுதிப்பாடு கிடையாது.

இதனால்தான் ஷி யானின் இலங்கைவருகைபலசர்ச்சைகளின் நாயகமாகத் திகழ்கின்றது.

இடிமின்னல்
(idiminnal@gmail.com)

## அம்பிட்டிய ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தேரர் ஆகியோர் ஒரு புத்தர் சிலையை வைத்தனர். ஆனால், இரவோடு இரவாக பொலிஸாரால் அந்தப் புத்தர் சிலை அங்கிருந்து அகற்றப்பட்டு, அந்த இடத்தில் பாதுகாப்புப் பலப் படுத்தப்பட்டது.

இதனை அறிந்து ஒக்டோபர் 19 அங்கு செல்வதற்கு அம்பிட்டிய தேரர் முயன்றார். ஆனால் அதனால் பதற்றம் ஏற்படும் என்று கருதிய பொலிஸார் அவருக்கு அனுமதி மறுத்தனர். இதனால் ஆத்திரமடைந்த தேரர் பொலிஸாருடன் கடும் வாய்த் தர்க்கத்தில் ஈடுபட்டார்.

சாணக்கியன் குழுவினரே புத்தர் சிலையை இரவு எடுத்துச் சென்றுள்ளனர். காக்கிச் சட்டை அணிந்த பொலிஸார் கிழக்கு மாகாணத்தில் எங்களை எந்த இடத்துக்கும் செல்ல அனுமதிக்க மறுக்கின்றனர். நாடாளுமன்றத்தில் சாணக்கியன் பொய்களைக் கூறுகின்றார். நாம் இதுவரைக்கும் எந்த அரசியல்வாதிகளுடனும் இணைந்து செயற்படவில்லை என்றெல்லாம் அவர் கடும் வாய்த் தர்க்கத்தில் ஈடுபட்டார்.

அதனைத் தொடர்ந்து, இருதயபுரம் கிழக்கு பகுதியிலுள்ள பௌத்தமக்களின் மயானபகுதிக்குள் அப்பிரதேசத்தைச் சேர்ந்த பொது மக்கள் தமது வீடுகளை உடைத்த சிலகழிவுப்பொருட்களை கொட்டியுள்ளதாக தெரிவித்து தமது சகாக்களுடன் குறித்த பகுதிக்கு சென்ற அம்பிட்டிய சுமன ரத்ன தேரர், அங்குள்ள பொது மக்களை அச்சுறுத்தும் வகையில் செயற்பட்டிருந்தார்.

அவர் அங்கு பொலிஸாருடன் மேலும் முரண்பட்டார். அப்போது தெற்கில் உள்ள தமிழர்கள் அனைவரையும் கொல்வேன் என்று மிரட்டுகின்றார். அவரது மிரட்டல் காணொலி கடந்த இரு நாட்களாக சமூக ஊடகங்களில் தீவிரமாகப் பரவி வருகின்றது. இதையடுத்து தேரரை உடனடியாகக் கைது செய்யவேண்டும் என்று வலியுறுத்தல்கள் குவிந்து வருகின்றன.

தேரரைக் உடன் கைது செய்ய வேண்டும் என்று அமைச்சர் ஜீவன் தொண்டமான், நாடாளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ.சுமந்திரன், மனோ கணேசன், வேலு குமார் ஆகியோர் வலியுறுத்தியுள்ளனர். பொது அமைப்புக்கள் பலவும்கூட தேரரைக் கைது செய்யும்படி வலியுறுத்தியுள்ளன.

''தமிழர்களுக்கு பகிரங்கமாகவே கொலை மிரட்டல் விடுகின்றார். பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட வேண்டிய நபர் போலவே செயற்பட்டு வருகின்றார். எனவே, கடந்த காலங்களில் இந்நாட்டில் இடம் பெற்ற சம்பவங்களை படிப்பினையாகக்கொண்டு அம்பிட்டிய சுமனரத்ன தேரரை உடனடியாக கைது செய்ய வேண்டும்" என்று நாடாளுமன்ற உறுப்பினர் வேலு குமார் வலியுறுத்தியுள்ளார்.

தமிழர்களை துண்டு துண்டாக வெட்டுவேன், கொல்லுவேன், தெற்கில் வாழும் தமிழரை கொல்லுவேன் என்று மனநோயாளி போல் நடுத்தெருவுக்கு வந்து கத்தும் மட்டக்களப்பு அம்பிட்டிய சுமனரத்தின தேரரை கைதுசெய்து சிறையில் அடைக்க வேண்டும். அல்லது அங்கொடையில் அடைக்க வேண்டும் என தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் தெரிவித்தார்.

## கடல் ஆய்வுக்கான...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தொடங்குவதற்கான அனுமதி பாதுகாப்பு அமைச்சிடம் இருந்து கிடைப்பதற்காகக் காத்திருப்பதாக அயலுறவுத்துறை அமைச்சு தெரிவித்துள்ளது. முன்னதாக, இந்தக் கப்பல் கொழும்புத் துறைமுகத்தில் எரிபொருள் மற்றும் உணவுப் பொருள்களை ஏற்றுவதற்குமட்டுமே அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக அயலுறவுத்துறை அமைச்சு அறிவித்திருந்தது.

இந்த சீன ஆய்வுக் கப்பல் இலங்கைக்கு வந்தது குறித்து இந்தியா கடுமையான பாதுகாப்புக் கரிசனைகளைக் கிளப்பியுள்ள நிலையில், கடலில் ஆய்வுப் பணிகளை மேற்கொள்ள இந்தக் கப்பலுக்கு முன்னர் வழங்கப்பட்டிருந்த 10 நாட்கள் அவகாசத்தை 5 தினங்களிற்கானதாகக் குறைத்து வழங்க கொழும்பு ஆட்சியாளர்கள் இப்போது முடி-வ செய்துள்ளனர் என்று தெரிகின்றது. சீனக்கப்பலும் அதற்குச் சம்மதம் தெரிவித்துள்ளதாக அறிய முடிந்தது.

இதனடிப்படையில் இலங்கையின் தெற்கு மற்றும் மேற்கு கடலில் இந்தக் கப்பல்

ஆய்வு நடத்த பாதுகாப்பு அனுமதி வழங்கும் ஏற்பாடுகள் துரிதமாக இடம்பெறுவதாகவும் நம்பகமாகத் தெரியவருகின்றது. இன்று கட்டாயம் அந்த அனுமதி வழங்கப்படும் என்றும் அறிய முடிந்தது.

கொழும்புத் துறைமுகத்தில் இந்தக் கப்பல் தங்கி நிற்பது இன்றுதான் கடைசி. ஒக்டோபர் 25 வந்த கப்பல் மூன்று நாள்கள் தரித்து நின்ற பின்னர் இலங்கையைச் சேர்ந்த 4 விஞ்ஞானிகளையும் ஏற்றிக்கொண்டு புறப்படவுள்ளது.

## அமைச்சர்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வரவேற்கின்றோம்.

இதேநேரம் இதே அமைச்சரின் ஆசீர்வாதத்துடன் வடக்கிலே அமைக்கப்படும் கடலட்டை பண்ணைகள், தடைசெய்யப்பட்ட உள்ளூர் தொழில்முறைகள் என்பவற்றால் வடக்கு மாகாண கடல்வளம் அழிக்கப்பட்டு கடற்றொழிலாளர்களது வாழ்வாதாரமும் நாசமாக்கப்பட்டு வருகிறது. இலங்கையில் நடைமுறையில் உள்ள சட்டங்களை கொண்டு உள்ளூரில் தடைசெய்யப்பட்ட தொழில்களை கட்டுப்படுத்த எவ்வித நடவடிக்கைகளையும் எடுக்காது, இவற்றை மூடிமறைக்கவே இந்திய மீனவர்களது பிரச்சினையை மட்டும் பூதாகரப்படுத்தி வருகின்றனர்.

ஐ.நா. வதிவிடப் பிரதிநிதியை நாம் சந்திக்க முடியாதவர்களாக இருக்கின்றோம். நீங்களும் எங்களைச் சந்திக்கும் நிலை இதுவரை இல்லை. ஆகவே ஊடகங்கள் வாயிலாக நாங்கள் உங்களிடம் இந்த விடயங்களை முன்வைக்கின்றோம்.

முக்கியமாக யாழ். மாவட்டத்தில் கடற்றொழில் அமைச்சினால் சட்டவிரோதமான செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. எங்களுடைய பாரம்பரிய கடற்றொழிலாளர்களையும் எங்களது இருப்பையும் அழிக்கும் வேலையை சீனாவோடு இணைந்து கடற்றொழில் அமைச்சர் செய்து வருகின்றார்.

நாடாளுமன்றத்தில் கொண்டுவரப்பட்ட 2017 ஆம் ஆண்டு 11ம் இலக்க உள்ளூர் இழுவைமடி சட்டம் புத்தளத்தில் நடைமுறையில் இருக்கிறது. யாழ்ப்பாணத்தில் நடைமுறையில் இல்லை. இதற்குக் கடற்றொழில் அமைச்சும், அமைச்சருமே காரணம்.

உள்ளூரிலே தடைசெய்யப்பட்ட கடற்றொழில் நடவடிக்கைகளை தடைசெய்து உள்ளூர் சட்டங்களை நடைமுறைப்படுத்துமாறு கடற்றொழில் அமைச்சரிடம் வலியுறுத்துங்கள்.

உள்ளூரிலே கடற்றொழிலாளர்கள் நாங்கள் நெருக்கப்பட்டு நசுக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றோம். இந்த கடற்றொழில் திணைக்களத்தினாலும் பணிப்பாளர் நாயகத்தினாலும் கடற்றொழில் அமைச்சினாலும் ஏறபடுத்தப்பட்டு வரும் நெருக்குதல்களில் இருந்து எங்களைக் காப்பாற்றுமாறும், எங்களது கடலில் நாங்கள் சுதந்திரமாக மீன்பிடித்து ஆளுமையுடன் வாழ்வதற்கு ஒரு வழியை ஏற்படுத்தும் வகையில் இலங்கைக்கான ஐ.நா. வதிவிடப் பிரதிநிதி ஆகிய நீங்கள் கடற்றொழில் அமைச்சரிடம் வலியுறுத்த வேண்டும் என்பது வடக்கு மாகாண மீனவர்களாகிய எங்களது எதிர்பார்ப்பாக உள்ளது.

நீங்கள் வடக்கு மாகாணத்திற்கு வரும்போது கடற்றொழிலாளர்களது பிரச்சினைகளை நேரில் சந்தித்து கேட்டறிந்துகொள்ளும் சந்தர்ப்பத்தை கட்சி சார்ந்தவர்கள் தவிர்த்து உண்மையான வடக்கு மாகாண மீனவர்களை பிரதிநிதித்துவப்படுத்தும் பிரதிநிதிகளுக்கும் கடற்றொழிலாளர்களுக்கும் ஏற்படுத்தித்தர வேண்டும் என்பதனையும் வடக்கு மாகாண மீனவர்கள் சார்பில் தயவாக கோரிநிற்கின்றோம். என அவர் அன்னராசா மேலும் தெரிவித்தார்.

## பாடசாலைகளுக்கு.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாடாளவிய ரீதியில் போராட்டங்கள் முன்னெடுக் கப்பட்டன.

கடந்த 24ஆம் திகதி பத்தரமுல்லவில் உள்ள இசுருபாயவுக்கு முன்பாக, அதிபர், ஆசிரியர் தொழிற் சங்கங்கள் அதிகரித்துள்ள வாழ்க்கைச் செலவுக்கு ஏற்பட சம்பள அதிகரிப்பு செய்யப்பட வேண்டும் என்பதை வலியுறுத்தி போராட்டமொன்றை முன்னெடுத்தனர்.

இதன்போது மிகக்கடுமையான தாக்குதல்கள் அவர்கள் மீது மேற்கொள் ளப்பட்டன.

இதனைக் கண்டித்து நேற்றையதினம், நாடாளவிய ரீதியில் உள்ள பாடசாலைகளுக்கு முன்னால் ஒன்று கூடிய ஆசிரியர்கள் மத்திய அரசாங்கத்தின் நடவடிக்கைகளை கண்டித்து போராட் டத்தினை முன்னெடுத்தனர்.

## மட்டக்களப்புப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மற்றும் மதங்களை மையப்படுத்தி தெரிவிக்கும் கருத்துக்கள் பெரும் நெருக்கடிகளை ஏற்படுத்தியுள்ளது.

குறிப்பாக, வன்முறைகள் தோற்றம் பெறுவதற்கான ஏது நிலைகளை தேரர் மேலும் தூண்டும் வகையில் செயற்படுவதன் காரணமாக, அவருக்கு எதிராக உடனடியாக நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறும் கோரினார்.

அதேநேரம், குறித்த தேரருக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யவதற்கான ஏற்பாடுக ளும் அடுத்தகட்டமாக மேற்கொள் ளப்படவுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

## சிஐடியிலும் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சுமண தேரர் எனும் மட்டக்களப்பில் வசிக்கும் நபர் ஒருவரின் நடவடிக்கைகள் குறித்து நான் உங்களின் கவனத்துக்கு கொண்டுவர விரும்புகின்றேன்.

இந்த நபர் தொடர்ச்சியாக இனவெறிப் போக்கினை மனோ நிலையை வெளிப்படுத்தி வருகிறார். மேலும், அவர் சமூகங்கள் மத்தியில் மோதலை தூண்டும் விதத்தில் தீவிரமாக செயற்பட்டு வருகின்றார்.

அவர் பல தடவைகள் பொலிஸாருக்கு எதிராக வன்முறையான விதத்தில் நடந்துகொண்டுள்ள போதிலும் அவருக்கு எதிராக எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

நேற்று அவர் பொலிஸாருடன் கடும் வாக்குவாதத்தில் ஈடுபட்டிருந்தார். அவ்வேளை கொழும்பில் உள்ள தமிழர்களின் உயிருக்கு ஆபத்து ஏற்படுத்துவேன் என பகிரங்கமாக ஊடகங்களுக்கு தெரிவித்திருந்தார்.

இது அச்சம் ஏற்படுத்தும் நடவடிக்கை. கொழும்பிலும் ஏனைய பகுதிகளிலும் வாழும் தமிழர்களின் பாதுகாப்புக்கான நேரடி அச்சுறுத்தல்.

அம்பிட்டிய சுமண தேரருக்கு எதிராக உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறு நான் உங்களை கேட்டுக்கொள்கின்றேன். அவரது கோபத்தை தூண்டுகின்ற பேச்சுக்களுக்காகவும் வன்முறையை தூண்டுகின்ற விதத்திலான செயற்பாடுகளுக்காகவும் அவரை கைது செய்வது அவசியம்.

இவ்வாறான நடவடிக்கைகள் நாட்டின் பல்வேறுபட்ட சமூகத்தினர் மத்தியில் ஐக்கியம், சமாதானம் என்பவற்றுக்கு ஆபத்தை ஏற்படுத்தலாம். அதனை சகித்துக்கொள்ளக்கூடாது என குறிப்பிட்டுள்ளார்.

## மாணவர்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கலகத்தடுப்பு பொலிஸார் ஆகியோர் பேரணியை தடுத்து நிறுத்தும் அறிவித்தலை விடுத்தனர். மாணவர்கள் தொடர்ந்து முன்னேறிச் செல்வதைத் தடுக்கும் வகையில் தடுப்புகளை ஏற்படுத்தினர். மாணவர்கள் அதனையும் மீறி முன்னேற முயன்றனர்.

உடனடியாகக் கண்ணீர்ப்புகை குண்டு வீசித் தாக்கப்பட்டதோடு, நீர்த்தாரைத் தாரைத் தாக்குதலும் நடத்தப்பட்டது. இதனையடுத்து கலைந்து ஓடிய மாணவர்கள் விஹாரமகா தேவி பூங்காவிற்குள் சென்றுவிட்டு பின்னர் மீண்டும் ஒன்று கூடி பேரணியைத் தொடங்கினர்.

தொடர்ந்து கண்ணீர்ப்புகை குண்டுகள் தாராளமாக வீசப்பட்டு, நீர்த்தாரைத் தாக்குதலும் நடத்தப்பட்டது.

அத்தோடு மருத்துவ பீட மாணவ செயற்பாட்டுக் குழுவின் ஏற்பாட்டாளர் நவீன் தாரக உள்ளிட்ட மாணவ செயற்பாட்டாளர்கள் சிலரையும் பொலிஸார் கைது செய்து பொலிஸ் நிலையத்துக்கு அழைத்துச் சென்றனர்

## பொலிஸ் மா.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விரும்புகிறேன்.

அம்பிட்டிய சுமண தேரர், மட்டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந்த எமது கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சாணக்கியனையும், நாட்டின் தென்பகுதியில் வாழும் அனைத்துத் தமிழர்களையும் துண்டு துண்டாக வெட்டிவிடுவேன் என்று வெளிப்படையாக மிரட்டிச் சென்றுள்ளார்.

இது அப்பட்டமாக 2007ஆம் ஆண்டின் ஐசிசிபிஆர் (ஹுளீ- ளீஊணயூ) சட்டத்தின் 56ஆம் பிரிவு 3(1) மற்றும் (2)இன் கீழ் தண்டனைக்குரிய குற்றமாகும். ஏன் பொலிஸார் குறித்த தேரருக்கு எதிராக உடனடியாக நடவடிக்கை எடுக்கவில்லை என்று கேள்வி எழுப்பபட்டுள்ளது.

இக்கடிதம் பிரதி சபாநாயகருக்கும், ஊடகங்களுக்கும் பிரதியிடப்பட்டுள்ளமை குறிப்பிடத் தக்கது.

அத்துடன் இவ்விவகாரம் தொடர்பில் பொலிஸ் தலைமையகத்திலும் அமைச்சர் முறைப்பாடு முன்வைத்துள்ளார்.

அதேபோல குறித்த தேரரின் கடந்தகால செயற்பாடுகள் இன மோதலை ஏற்படுத்தும் நோக்கில் அமைந்துள்ளதால் அது தொடர்பில் உரிய வகையில் விசாரணை நடத்தி பாதுகாப்பு அமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதிக்கும், பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சருக்கும், தனக்கும் அறிக்கையொன்றை வழங்குமாறும் அமைச்சர் ஜீவன் தொண்டமான் கோரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பில் கருத்து வெளியிட்ட அவர் தெரிவித்ததாவது:

தமிழ் மக்களை இலக்குவைத்து அம்பிட்டிய சுமன ரத்ன தேரர் வெளியிட்டுள்ள கருத்துகள் இனக்குரோதத்தை விதைக்கும் வகையில் உள்ளதுடன், ஆட்சியாளர்களால் முன்னெடுக்கப்பட்டுவரும் நல்லிணக்க முயற்சிகளை சீர்குலைக்கும் வகையிலும் அமைந்துள்ளன.

கொரோனா பெருந்தொற்றால் எமது நாட்டு பொருளாதாரம் சரிந்தது, அதன் பின்னர் அரசியல் குழப்பத்தால் அதலபாதாளத்திலேயே விழுந்தது. எனவே, அனைவரும் இணைந்து செயற்பட்டால்தான் இந்நாட்டை கட்டியெழுப்பலாம். நாட்டில் முன்னேற்றத்துக்கு இன, மத நல்லிணக்கம் மிக முக்கியம்.

இந்நிலையில் இனவாதம் கக்கி, இன முறுகலை ஏற்படுத்தும் வகையில் குறித்த தேரர் செயற்பட்டு வருகின்றார். கருத்து சுதந்திரம் என்ற போர்வையில் அவர் சட்டத்தை கையில் எடுத்துசெயற்பட முற்படுகின்றார். எனவே, அவருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் -- என்றார்.

## கைத்தொழில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிலைமைகளில் சிறிய நடுத்தர மற்றும் பெரிய என்ற வேறுபாடின்றி தொழில் முயற்சியாளர்கள்

தொடர்ச்சி 8ம் பக்கம்...

காலைக்கதிர் Kalaikkathir

# குடாநாட்டில் தொடர்ந்தும் ராணுவத்தை நிலைநிறுத்தப் பொலிஸார் முயற்சிப்பு

## சிறிதரன் குற்றச்சாட்டு



யாழ்ப்பாண மாவட்டத்தில் பொலிஸாரின் செயற்பாடு மந்தகதியில் இடம்பெறுவதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றஉறுப்பினர்சிறீதரன் தெரிவித்தார்.

யாழ்ப்பாண மாவட்ட ஒருங்கிணைப்புகுழுகூட்டத்தில்பேசிய அவர், சட்டவிரோத மணல் கடத்தல்உள்ளிட்டவிடயங்களுக்கு பொலிஸார் இராணுவத்தின் உதவியை நாடுகின்றனர் எனக் கூறியிருந்தார்.

குறிப்பாக இராணுவத்தை யாழில் தொடர்ச்சியாக நிலை நிறுத்த அவர்கள் இவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபடுகின்றார்களா என்றும் நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரன் கேள்வி யெழுப் பினார்.

எனவே இந்த விடயம் தொடர்பில் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் இல்லையென்றால் பொலிஸ் அதிகாரங்களை மாகாணசபைக்குவழங்குமாறும் கேட்டுக்கொண்டார்.

இதற்குபதிலளித்தயாழ்ப்பாண பிரிவு உதவி பொலிஸ் அத்தியட்சகர்,உயிரைபணயம்வைத்து தான் பொலிஸார் கடமையில் ஈடுபடுவதாக தெரிவித்திருந்தார்.

ஆளணிபற்றாக்குறைபோன்ற பல்வேறு இடர்பாடுகளுக்கு மத்தியில் கடமையாற்றி வருவதால் நாடாளுமன்ற உறுப்பினரின் குற்றச்சாட்டை ஏற்றுக்கொள்ள முடியாது எனத் தெரிவித்திருந்தார். (05)

# ஜனாதிபதிக்கு தொடர்ந்தும் ஆதரவளிக்கப்போவதில்லை

## ரோஹித அபேகுணவர்த்தன திட்டவட்டம்

2024 ஆம் ஆண்டுவரை மட்டும் தான் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவுவழங்கப்படும்என ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் ரோஹித அபேகுணவர்த்தன தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் –

நாம் அரசாங்கத்தை அமைத்திருந்தாலும், இது தற்காலிக அரசாங்கமொன்று தான். 2024 ஆம் ஆண்டுவரை மட்டும்தான் இந்த அர சாங்கம் இருக்கும்.

இதன் பின்னர் இவரைக் கொண்டுவருவோம்- அவரைக் கொண்டுவருவோம் என நாம் எந்த இடத்திலும் கூறவில்லை.

ஆனால், இந்த அரசாங்கத்தை நடுவில் உடைத்து, முட்டாள் தனமான வேலையை செய்யவும் நாம் தயாரில்லை.

ஜனாதிபதிக்கோ அமைச்சரவைக்கோ நாட்டை வழிநடத்த முடியாவிட்டால், உடனடியாகத் தேர்தல் ஒன்றுக்கு செல்ல வேண்டும்.

அல்லாவிட்டால் நாட்டில் காட்டுச் சட்டம் வந்துவிடும். மக்கள் தான் அரசாங்கத்தைத் தீர்மானிக்க வேண்டும்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் மனதில் என்றும் மஹிந்த ராஜபக்ஷ தான் உள்ளார்.

அரசாங்கமானது, சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகளை நிறைவேற்றுவதற்காக நாட்டு மக்களைத் துன்பத்திற்குள் தள்ளியுள்ளது.

மக்கள் மரணித்த பின்னர், ஐ.எம்.எப்.இன் கடனுதவி கிடைத்தும் பலனில்லாமல் போய்விடும்.

எனவே, அரசாங்கம் இதுதொடர்பாகவும் சிந்தித்து நடவடிக்கை எடுக்க வேண்டும். – என அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (05)

# நாட்டின் பொலிஸ் வேலை என்பது சில்லறைகடை வேலை கிடையாது

## யாழ். உதவிப்பொலிஸ் அத்தியட்சகர் இடித்துரைப்பு

'பொலிஸ் வேலை என்பது சில்லறைக் கடை வேலை கிடையாது'' என யாழ்ப்பாண உதவி பொலிஸ்அத்தியட்சகர் ஜாரூல் தெரிவித்துள்ளார்.

யாழ்.மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற மாவட்ட ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தில், கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில் –

நாங்கள் உயிரைப் பணயம் வைத்து தான் கடமை செய்கின்றோம். பொலிஸார் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்து, உயிரை பணயம்வைத்தே கடமையாற்றி வருகின்றார்கள்.

மணல் கடத்தல் விடயத்தை மாத்திரம்நாங்கள்கண்காணித்துக் கொண்டிருக்கமுடியாது. சாதாரண மக்கள் என்ன பிரச்சினை என்றாலும், முதலில் நாடுவது பொலிஸ் நிலையத்தைத் தான்.

நாங்கள்ஆளணிபற்றாக்குறை போன்றபல்வேறுஇடர்பாடுகளுக்கு மத்தியில் கடமையாற்றி வருகின்றோம். எனினும் எங்களால் யாழில் பெருமளவு குற்றங்களை கட்டுப்படுத்தக்கூடியதாகயுள்ளது.- இவ்வாறு தெரிவித்துள்ளார். (05)






# வீதி விபத்துக்களால் 115 சிறுவர்கள் சாவு

இந்த ஆண்டில் மாத்திரம் சுமார் 115 சிறுவர்கள் வீதி விபத்துகளால் உயிரிழந்துள்ளனர் என சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் மனோஜ் ரணகல தெரிவித்துள்ளார். கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில் –

கடந்த ஜனவரி மாதம் முதலாம் திகதி முதல் ஒக்ரோபர் 15 ஆம் திகதி வரையில் இந்த மரணங்கள் பதிவாகியுள்ளன. பெரும்பாலும் சாரதிகள் கவனக்குறைவாக வாகனம் செலுத்துவதே இந்த உயிரிழப்புகளுக்குக் காரணமாக உள்ளது.

கடந்த 2022 ஆம் ஆண்டில் 2,539 வீதி விபத்துகள்பதுவாகியிருந்தன. இந்தவருடம்ஒக்ரோபர் மாதம் 15 திகதி வரையில் 1,790 வீதி விபத்துக்கள் பதிவாகியுள்ளன. இதில் 18 வயதுக்குட்பட்ட 129 பேர் உயிரிழந்தனர். அதேநேரம் 115 சிறுவர்களையும் இழந்துள்ளோம். இது கவலையளிக்கும் விடயமாகும். மோட்டார் சைக்கிள் விபத்துக்களே அதிகளவில் இடம்பெறுகின்றன.

குறிப்பாக சிறுவர்களும் வீதி விபத்துக்களில் இறக்கின்றனர். தாய் மற்றும் தந்தை ஹெல்மெட் அணிந்துதங்கள்மகனையோமகளையோநடுவில் வைத்து ஏற்றிச் செல்கிறார்கள். நடுவில் செல்லும் அவருக்கு ஹெல்மெட் இல்லை, அன்புள்ளவர்கள் அவ்வாறு செய்ய மாட்டார்கள். விபத்து ஏற்பட்டால் அந்த பிள்ளைக்கே அதிக பாதிப்பு என்பதை உணர்ந்துக்கொள்ள வேண்டும். – இவ்வாறு மனோஜ் ரணகல தெரிவித்துள்ளார். (05)

# பௌத்தர்களின் மயானத்தில் கற்பாறை கொட்டியவர் கைது

மட்டக்களப்பு ஜெயந்திபுரத்தில் உள்ள பௌத்தர்களின் மயானத்தில் சட்டவிரோதமாக கற்பாறைகளைக் கொட்டிய நபர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கடந்த சில வாரங்களுக்கு முன்னர் குறித்த பகுதியில் வீதி நிர்மாணப் பணிகளை செய்து-வந்த ஒப்பந்தகாரரான குறித்த நபர் மேலதிக கற்பாறைகளை கனரக வாகனத்தில் கொண்டு சென்று மயானத்துக்குள் கொட்டியுள்ளார்.

இதனையடுத்து இது தொடர்பாக ஜெயந்திபுர விகாரை விகாராதிபதி பொலிஸ் நிலையத்தில் கடந்த 3 தினங்களுக்கு முன்னர் முறைப்பாடு செய்தபோதிலும், பொலிஸார் எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கவில்லை எனக் கூறப்படுகின்றது.

இதனையடுத்து மட்டக்களப்பு மங்களராம விகாராதிபதி அம்பிட்டிய சுமணரட்ண தேரர் புதன்கிழமை சென்று மீண்டும் முறைப்பாடு செய்திருந்ததோடு குறித்த மயானபகுதிக்கு சென்று நாடாளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் ஆள்களில் இந்தக் கொடூரமான வேலை எனத் தெரிவித்து தென்பகுதியில் உள்ள தமிழர்களின் தலையை வெட்டப்போவதாகவும் புலிகள் என தெரிவித்து வீதியில் சத்தமிட்டு போராட்டத்தில் ஈடுபட்டிருந்தார்.

இந்நிலையில் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்ட வீதி அபிவிருத்தி ஒப்பந்தக்காரரை மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்திய போது, அவரை எதிர்வரும் 30 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (05)

# வவுனியாவில் பொதுமக்கள் உண்ணாவிரத போராட்டம்

வவுனியா, புளியங்குளம் வடக்கு முத்துமாரிநகர்மக்கள்இணைந்துஐந்து அம்ச கோரிக்கையை முன்னிறுத்தி அடையாள உண்ணாவிரத போராட்டத்தை வியாழக்கிழமை காலை முன்னெடுத்தனர்.

இதன்போது 'வவுனியா வடக்கு பிரதேச செயலாளரை இடமாற்றம் செய்ய வேண்டும், புளியங்குளம் வடக்கு கிராம சேவகரை உடனடியாக இடமாற்றம் செய்ய வேண்டும், மக்கள் கேட்ட கேள்விகளுக்கு பிரதேச செயலாளர் பதில் வழங்காமைக்குரிய காரணம் என்ன?, 15 வருடங்களாக முத்துமாரி நகர் ஏ புளக் காணிகளுக்கு காணிப்பத்திரம் வழங்காமைக்குரிய காரணம்என்ன?, எந்தவிதமான குற்றச்செயல்களும் இல்லாமல் எட்டு இளைஞர்களை நீதி மன்றத்தில் வழக்கு தாக்கல் செய்தமைக்கான காரணம் என்ன? என்ற ஐந்து அம்சக் கோரிக்கைகளை முன்னிறுத்தியே குறித்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இதேவேளை தமது ஐந்து அம்சக் கோரிக்கைகளுக்கு உடனடி தீர்வு கிடைக்கும் வரை குறித்த போராட்டம் தொடரும் எனவும் அவர்கள் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (05)

# ஐஸ்கிரீம் விற்பனைசெய்யும் வாகனம் பாதுகாப்பு வேலியில் மோதி விபத்து

## தம்பதியினர் காயம்

தெற்கு அதிவேக நெடுஞ்சாலையில் ஐஸ்கிரீம் விற்பனை செய்யும் வாகனம் ஒன்று வீதியின் பாதுகாப்பு வேலியில் மோதி இடம்பெற்ற விபத்தில் தம்பதியினர் காயமடைந்துள்ளனர் என குருதுகஹ ஹடேகம அதிவேக நெடுஞ்சாலை போக்குவரத்துப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்தில் ஐஸ்கிரீம் வாகனம்வீதியின் இடதுபக்கமாக இழுத்துச்செல்லப்பட்டு பாதுகாப்பு வேலியில் மோதியுள்ளதோடு வாகனத்தின்சாரதிஇடதுபக்கத்தில் அமர்ந்திருந்த மனைவி மற்றும் குழந்தை ஆகியோர் வாகனத்திலிருந்து வெளியே தூக்கி வீசப்பட்டு வாகனம் கவிழ்ந்துள்ளது.

ஐஸ்கிரீம் விற்பனை வாகனமானது கம்பஹாபிரதேசத்தில்நடைபெற்ற விழாஒன்றில்ஐஸ்கிரீம்விற்பனை செய்துவிட்டு கடவத்தையில் இருந்து அம்பலாந்தோட்டை நோக்கிபயணித்தபோதுலொறின் ஓட்டுநர்உறங்கியமையால்இந்த விபத்து இடம்பெற்றிருக்கலாம் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

காயமடைந்த தம்பதியினர் வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளதோடு தம்பதியின் இரண்டரை வயது குழந்தை எவ்வித காயமும் இன்றி தப்பியுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர். (05)





காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A. கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## கைது அவசியம்

சர்ச்சைக்குரிய அம்பிட்டிய சுமணரத்ன தேரரின் இனவாதக் கருத்துக்கள் தமிழ் மக்கள் மத்தியில் அமைதியின்மையையும் அச்சத்தையும் ஏற்படுத்தியுள்ளன. இதனால் அவரைக் கைது செய்யும்படியான கோரிக்கைகள் பலமாக எழுந்துள்ளன. அவரது கருத்துக்கள் இன மற்றும் மத முரண்பாடுகளுக்கு வழி கோலும் என்று சுட்டிக்காட்டப்படுகின்றது.

மட்டக்களப்பில் சர்ச்சைக்குரிய சிங்களக் குடியேற்றம் இடம்பெறும் மயிலத்தமடு மாதவணைப் பகுதியில் புத்தர் சிலையை வைத்து அங்கு பதற்றத்தை அதிகரிப்பதிலும் இந்தத் தேரரே மும்முரமாக இருந்தார். மாதவணைப் பகுதியைச் சேர்ந்த கால்நடைப் பண்ணையாளர்கள் தமது மேய்ச்சல் நிலத்தைச் சிங்களவர்கள் ஆக்கிரமித்துள்ளார்கள் என்று தெரிவித்து தொடர்ச்சியாகப் போராட்டம் நடத்திவரும் நிலையில் அதற்கெதிராக சிங்களர்களைத் திரட்டிப் போராட்டம் நடத்துவது, நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு எதிராக மிரட்டல் விடுவது என்று அம்பிட்டிய தேரரின் அட்டகாசங்களும் அட்டூழியங்களும் அளவு கடந்தவை.

இப்போது அதன் உச்சமாகத் தெற்கில் உள்ள தமிழர்கள் அனைவரையும் வெட்டிக் கொல்வேன் என்று அவர் மிரட்டுகின்ற காணொலி சமூக ஊடகங்களில் வெளியாகி பெரும் அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது. அதனை அடுத்தே அவரைக் கைது செய்யும்படி பல முறைப்பாடுகள் வழங்கப்பட்டுள்ளன. அரசியல்வாதிகளும் பொது அமைப்பினரும் வலியுறுத்துகின்றனர். இருப்பினும் நேற்றிரவு வரை அவர் கைது செய்யப்படவில்லை.

இந்த நாட்டில் சட்டம் அனைவருக்கும் சமம் என்று சொல்லப்பட்டாலும் அது பிக்குகளுக்கு முன்பாக கைகட்டி, வாய் பொத்தி, வலுவிழந்து நிற்பதுதான் வழமை. அதன் காரணமாகவே ஞானரத்ன தேரர் முதற்கொண்டு பிக்குகள் பலரும் இனவாதத்தைக் கக்கவும் செயற்படவும் துணிகின்றனர்.

ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்க பதவியேற்றுக் கொண்ட பின்னர், அரசமைப்பின் 13ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துப்போவதாக அவர் தெரிவித்ததும் அரசமைப்பின் பிரதிகளை பிக்குகள் தீயிட்டு எரித்தனர். வேறு யாராவது இப்படி அரசமைப்பை உதாசீனம் செய்திருந்தால் உடனடியாகவே கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டிருப்பார்கள். ஆனால் அரசமைப்பின் பிரதிகளை எரித்த பிக்குகளுக்கு எதிராக எந்தவிதச் சட்ட நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

அதுவும் போக சட்டம் ஒழுங்குக் காவலர்களான பொலிஸார் பிக்குகளுக்கு எதிராக எப்போதுமே பல்லுப்பிடுங்கப்பட்ட பாம்புகள் போன்று பவ்வியமாக நடந்துகொள்வதும் பிக்குகளுக்கு துணிச்சலையும் அத்துமீறுவதற்கான அதிகாரத்தையும் பெறுகின்றார்கள். இது ஏற்புடையதல்ல.

சட்டத்திற்கு முன்னால் அனைவரும் சமம் என்பது நிரூபிக்கப்படவேண்டும். அத்தோடு இன, மத முரண்பாடுகளை ஏற்படுத்த முயலும் சுமணரத்தன தேரர் போன்றோரை உடனடியாகக் கைதுசெய்து ஏனைய பிக்குகளுக்கும் உறுதியான செய்தி வழங்கப்படுவது அவசியமாகும்.

# இலங்கைக்கு அமெரிக்கா தேவையா இல்லையா?

உபுல் யோசப் பெர்னான்டோ



தேசிய பாதுகாப்பு தொடர்பான நாடாளுமன்ற மேற்பார்வைக் குழு கடந்த ஜூன் மாதம் கூடிய போது, தொலைத்தொடர்புத் துறையைத் தனியார் மயமாக்கல் தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் என்று முடிவுசெய்தது. குழுவின் தலைவர் நாடாளு மன்ற உறுப்பினர் சரத் வீரசேகர இதனைத் தெரிவித்தார். அதன் பிறகு, அவர் தலைமையிலான நாடாளுமன்ற மேற்பார்வைக் குழுவின் அறிக்கையை ஏற்றுக் கொள்ள முடியாது என்றும், தொலைத்தொடர்பு தனியார்மய மாக்கல் தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் இல்லை என்றும் ஆளும் தரப்பு அறிக்கை வெளியிட்டது.

இத்தகையதொரு நிலையில், இலங்கையின் உள்நாட்டுப் பிரச்சினைகள் தொடர்பில் அறிக்கைகளை வெளியிட வேண்டாம் என இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி சுங்கிடம் தெரிவிக்குமாறு இதே, தேசிய பாதுகாப்புத் தொடர்பான நாடாளுமன்ற மேற்பார்வைக் குழு இந்த வாரம் ஆளும் தரப்புக்குப் பரிந்துரைத்துள்ளது. சரத் வீரசேகரவே இந்தப் பரிந்துரையைச் செய்துள்ளார்.



சரத் வீரசேகர அண்மையில் அமெரிக்கா செல்லவிருந்த நிலையில், அமெரிக்க தூதரகம் அவருக்கு விசா வழங்க மறுத்திருந்தது என்கிற பின்னணியையும் இந்த இடத்தில் கவனத்தில் கொள்ள வேண்டும்.

சரத் வீரசேகர, அமெரிக்கத் தூதுவர் குறித்து தெரிவித்த கருத்துக்கு ஆளும் தரப்பு இதுவரை பதிலளிக்கவில்லை. தொலைத்தொடர்பு தனியார் மயமாக்கல் தொடர்பான தேசிய பாதுகாப்பு தொடர்பான நாடாளுமன்ற மேற்பார்வைக் குழு அறிக்கையை நிராகரித்த ஆளும்தரப்பு, ஜூலிசுங் தொடர்பாக அதே குழுவின் தலைவர் முன்வைத்துள்ள பரிந்துரைகளை ஏற்குமா இல்லையா என்பது தெரியவில்லை.

சில மாதங்களுக்கு முன்னர் உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்த உத்தரவிட்ட நீதிமன்ற நீதிபதிகள் தொடர்பில் விசாரணை நடத்துவதற்கு ஆளும் தரப்பு நாடாளுமன்றக் குழுவொன்றை நியமித்ததுடன், தேர்தல் ஆணையாளரின் நடவடிக்கைகள் தொடர்பில் ஆராயவும் நாடாளுமன்றக் குழுவொன்றும் நியமிக்கப்படவுள்ளது. இப்படி ஆளும் தரப்பை எதிர்ப்பவர்களின் வாய்களை அடைக்க நாடாளுமன்றத்தைப் பயன்படுத்துகிறது ஆளும்தரப்பு என்று, இதற்கெதிராக எதிர்க்கட்சியினர் போர்க்கொடி தூக்குகின்றனர்.

அந்த வகையில் பார்த்தால், தற்போது ஆளும் தரப்பின் ஜனநாயக விரோத நடவடிக்கைகளை விமர்சித்து வரும் அமெரிக்க தூதருக்கு இப்போது தேசிய பாதுகாப்புக் குறித்த நாடாளுமன்ற மேற்பார்வைக் குழு மூலம் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இலங்கையின் உள்நாட்டுப் பிரச்சினைகளில் அமெரிக்கத் தலையீடு தொடர்பாக சரத் வீரசேகர தலைமையிலான நாடாளுமன்றக் குழு பரிந்துரைகளை வழங்கியபோது, இலங்கையின் பிணைமுறிச் செயலிழப்புக்கு எதிராக நியூயோர்க் ஹாமில்டன் வங்கி தாக்கல் செய்த வழக்கில் அமெரிக்காவின் தலையீடு குறித்து ஹாமில்டன் ரிசர்வ் வங்கியின் இறையாண்மைப் பத்திரதாரர்கள் ஆச்சரியம் வெளியிட்டனர். கடனை வசூலிக்க ஹாமில்டன் ரிசர்வ் வங்கி வழக்கு தொடர்ந்தது. எவ்வாறாயினும், அமெரிக்க அரசு இந்த வழக்கில் தலையிட்டு, இலங்கை அரசு தனது கடனை மறுசீரமைக்கும் வரை வழக்கின் தீர்ப்பை ஒத்தி வைக்குமாறு பெடரல் நீதிமன்றத்திடம் கேட்டுள்ளது. அமெரிக்காவின் இந்தத் தலையீடு குறித்து ஃபைனான்சியல் டைம்ஸ் நாளிதழ் தனது ஆச்சரியத்தை வெளிப்படுத்தியுள்ளது.



"ஒரு தீர்ப்பை வைத்திருப்பவர், பொதுவான மறுசீரமைப்பு நுட்பங்கள் பலவற்றாலும் அவமானப்படுத்தப்பட்டுள்ளார். மேலும் அதன் பாதுகாப்புக்குள் இருந்துகொண்டே கடன் மறுசீரமைப்பில் அவரால் தலையிடவும் முடிகிறது" என்று நியூயோர்க் டைம்ஸ் எழுதியுள்ளது.

''இதற்கு அமெரிக்கா எதிர்ப்பு தெரிவிப்பதாகத் தெரிகிறது. அமெரிக்க அரசு எழுதிய ஒரு கடிதத்தின் அடிக்குறிப்பில் மற்ற உத்தியோகபூர்வ கடன் வழங்குநர்கள் தங்கள் கருத்துப் பிரதிபலிப்புக்களைத் தனித்தனியாகச் சமர்ப்பிக்கலாம் என்று புரிந்துகொள்ளப்படுகின்றது'' எனத் தெரிவித்துள்ளது.

அமெரிக்க அரசின் நிலைப்பாடு கவர்ச்சிகரமானதாக இருந்தாலும் கூட, இலங்கையின் கடன் மறுசீரமைப்பில் அமெரிக்க அரசு எப்படி, ஏன் அக்கறை கொண்டுள்ளது என்பதையோ தனது கருத்துக்களை நீதிமன்றத்திற்கு தெரியப்படுத்துவதற்கு அதற்கென்ன தேவை இருக்கின்றது என்பதையோ வெளிப்படையாக அறிந்து கொள்வது கடினம்.

இலங்கையின் கடன் மறுசீரமைப்புக்கு எதிரான தீர்ப்பைப் விரைந்து பெறும் ஹமில்ட்டன் வங்கியின் அவசரத்தை மழுங்கடித்து தாமதப்படுத்துவதன் மூலம் இலங்கைக்கு உதவுவது அமெரிக்க அரசின் நோக்கமாக இருக்கலாம். இந்த விடயத்தில் நீதிமன்றம் இறுதியில் என்ன சொல்கின்றது என்பதை அறிய நாம் தொடர்ந்தும் இந்த வழக்கை அவதானித்துக்கொண்டிருப்போம்" என்று நியூயோர்க் டைம்ஸ் மேலும் தெரிவித்துள்ளது.

ஹாமில்டன் வங்கி விவகாரத்தில் அமெரிக்கா தலையிடாமல் இருந்திருந்தால், இலங்கையின் கடன் மறுசீரமைப்பு முயற்சி முற்றிலும் முறிந்து போயிருக்கும். இலங்கையின் கடனில் அமெரிக்காவின் தலையீடு இலங்கைக்கு நல்லது என்றால், இலங்கையின் ஜனநாயகத்தில் அமெரிக்காவின் தலையீடு இலங்கைக்கு பாதகமாக இருக்க முடியாது.

இலங்கை அரசின் ஜனநாயக விரோதச் செயல்கள் குறித்து அமெரிக்கா மௌனம் சாதிப்பதாக உலக மனித உரிமை அமைப்புகள் குற்றம்சாட்டியுள்ளன. ஹமில்டன் வங்கி விவகாரத்தில் இலங்கைக்குளந்த நிபந்தனையும் விதிக்காமல் அமெரிக்கா தலையிட்டது. இலங்கை அரசு ஜனநாயகத்தைப் பாதுகாக்கும் என்றும், இலங்கையை திவால் நிலையிலிருந்து காப்பாற்ற அமெரிக்கா உள்ளிட்ட சர்வதேச சமூகத்தின் ஆதரவைப் பெறும் என்றும் அந்த நாடுகள் உறுதியளிக்கவேண்டும். மஹிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக் காலத்தில் மேற்கத்திய நாடுகளுடன் பிரச்சினைகளை எதிர் கொண்டபோது, இலங்கைக்கான ஜேர்மன் தூதுவர் ஒருமாநாட்டில் மதிப்புமிக்க கருத்தை வெளி யிட்டார்.

அதாவது ஜேர்மனிக்கு இலங்கை தேவையா அல்லது இலங்கைக்கு ஜேர்மனி தேவையா என்பதை இலங்கை அரசுதான் தீர்மானிக்கவேண்டும். இந்தக் கூற்று அன்று இருந்ததை விட இன்று இலங்கைக்கு மிகவும் பொருத்தமானது.

# கோட்டா காலத்தில் பூனை போலிருந்தோர் தற்போது நாய்போலக் குரைக்கின்றார்கள்

## லான்சா சாட்டை அடி



கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதியாகவிருந்த வேளை பூனைகள் போல நடந்துகொண்ட நாமல்ராஜபக்ஷவும் சாகரகாரிய-வசமும் தற்போது நாய்கள் போலக் குரைக்கின்றனர் என பொதுஜனபெரமுனவின் நாடாளு மன்ற உறுப்பினர் நிமால் லான்ஸ தெரிவித்துள்ளார்.

சமீபத்தைய அமைச்சரவை மாற்றம் குறித்து நாமல்ராஜபக்ஷவும் சாகரகாரியவசமும் கடும் கருத்துக்களை வெளியிட்டுள்ளமை குறித்த கேள்விக்கு பதிலளிக்கையில் நிமால்லான்ஸ இதனைத் தெரிவித்துள்ளார்.

அமைச்;சரவைமாற்றங்களை ஜனாதிபதி உரிய முறையில் மேற்கொண்டுள்ளார் எனத் தெரிவித்துள்ள நிமால் லான்ஸவும் நாமலும் சாகரவும் அதனை எதிர்த்தால் அவர்கள் தங்களுக்கு மூளைகோளாறா எனப் பரிசோதிக்கவேண்டும் எனவும் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதிக்கு ஆதரவளிப்பதாகப் பொய் தெரிவிப்பதை விட, சாகர காரியவசம் பதவியை இராஜினாமாச் செய்துவிட்டு இவ்வாறான கருத்துக்களை வெளியிடவேண்டும். அவருக்கு இதற்கான துணிச்சல் உள்ளதா என நான் சந்தேகிக்கின்றேன் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

அமைச்சரவையை கோட்டபாய ராஜபக்ஷ நான்கு தடவை மாற்றியவேளை நாமல் அமைதியாக இருந்தார். ஆனால் ரணில் விக்கிரமசிங்க ஒருமுறை அமைச்சரவை மாற்றத்தை மேற்கொண்டவுடன் நாமல் தனது வழமையான சண்டியன் பாணியில் பேசுகின்றார் எனவும் நிமால் லான்ஸ தெரிவித்துள்ளார்.

(05)

# தேசிய அடையாள அட்டை, பதிவு சான்றிதழ் வழங்கல் கட்டணங்களில் மாற்றம் வருகிறது

தேசிய அடையாள அட்டை வழங்குவதற்கு அறவிடப்படும் கட்டணத்தைத் திருத்தியமைக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இது தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் பொது பாதுகாப்பு அமைச்சால் வெளியிடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

தேசிய அடையாள அட்டையின் சான்றளிக்கப்பட்ட பிரதிக்கான கட்டணம் 2,000 ரூபாவாக இருக்க வேண்டும் என வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும், தேசிய அடையாள அட்டைகளின் உண்மைத்தன்மையை சரிபார்ப்பதற்கான கட்டணம் ஒன்லைன் முறையில் சமர்பித்தால் ரூபா 25 ஆகவும், பௌதீக ஆவணங்கள் மூலமாகவோ அல்லது ஆணையர் ஜெனரலுக்கு ஏற்றுக்கொள்ளக்கூடிய மின்னணு முறை மூலமாகவோ சமர்ப்பிக்கப்பட்டால் ரூபா 500 ஆகவும் இருக்கும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும், தேசிய அடையாள அட்டை புகைப்படக் கலைஞராக பதிவு செய்வதற்கான கட்டணம் ஏற்கனவே 10,000 ரூபாவாக இருந்த நிலையில் அதற்கான கட்;டணத்தை 5000 ரூபா அதிகரித்து 15,000 ரூபாவாக மாற்றியமைக்க வேண்டுமென பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

அத்தோடு, பதிவுச் சான்றிதழைப் புதுப்பிப்பதற்கான ஆண்டுக் கட்டணமான 2,000 ரூபாவை 3,000 ரூபாவாக உயர்த்தவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (05)

# சட்டத்தரணிகளுக்கு அச்சுறுத்தல் அவர்களின் சங்கம் கடும் கவலை

தமது கடமைகளை நிறைவேற்றும் போது சட்டத்தரணிகளுக்கு அச்சுறுத்தல் விடுக்கப்படுவது தொடர்பாக இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் கடும் கவலை வெளியிட்டுள்ளது.

உயிருக்கு அஞ்சாமல் தமது தொழில்சார் கடமைகளை நிறைவேற்றும் சுதந்திரம் சட்டத்தரணிகளுக்கு இருக்க வேண்டும் என அதன் தலைவர் கௌசல்ய நவரத்ன தெரிவித்துள்ளார்.

கடந்த 17 ஆம் திகதி கலகெதர நீதிவான் நீதிமன்றில் சந்தேகநபர் ஒருவரால் பெண் சட்டத்தரணி ஒருவர் தாக்கப்பட்டதாகக் கூறப்படும் சம்பவத்தைத் தொடர்ந்து இந்த அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

இந்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது, பல சட்டத்தரணிகள் ஆஜராகி குறித்த பெண் சட்டத்தரணிக்கு நீதி வழங்கப்படுவதை உறுதிப்படுத்த உதவினர் என அவர் குறிப்பிட்டார்.

சட்டத்தரணிகள் பாதுகாப்பை உறுதிப்படுத்துவது இன்றியமையாத ஒன்று என்றும் நீதிமன்றத்தின் கண்ணியம் மற்றும் அதிகாரமும் பாதுகாக்கப்பட வேண்டும் என்றும் கௌசல்ய நவரத்ன தெரிவித்துள்ளார்.

(05)

# இலத்திரனியல் மயமாக்கப்பட்டுள்ளது உள்ளூராட்சிமன்ற கட்டண முறைமை

அடுத்த வருடம் முதல் அனைத்து உள்ளூராட்சி மன்றங்களுக்கும் ஒன்லைன் முறையின் மூலம் பணம் செலுத்தத் திட்டமிடப்பட்டுள்ளதாக மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு தெரிவித்துள்ளது.

பல உள்ளூராட்சி மன்றங்கள் இது தொடர்பான வேலைத்திட்டத்தை ஏற்கனவே ஆரம்பித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

மக்களுக்கு அசௌகரியம் ஏற்படாத வகையில் உள்-ளூராட்சி மன்றங்களின் வரி அறவீடு நடவடிக்கைகள் உள்ளிட்ட கொடுப்பனவுகளை மேற்கொள்வதே இந்த வேலைத் திட்டத்தின் நோக்கமாகும்.

அதன்படி, நாடளாவிய ரீதியில் உள்ள 341 உள்ளூராட்சி நிறுவனங்களிலும் அடுத்த வருடம் ஜனவரி மாதம் முதலாம் திகதி முதல் உரிய வேலைத் திட்டம் அமுல்படுத்தப்படும் என மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் ஜானக வக்கம்புர தெரிவித்துள்ளார்.

இதேவேளை, உள்ளூராட்சி மன்றங்களுக்குச் சொந்தமான அனைத்து வீதிகளின் வரைபடப் பணிகளை இவ்வருட இறுதிக்குள் நிறைவு செய்வதற்கு நம்பிக்கையுள்ளதாக ஜானக வக்கம்புர தெரிவித்தார்.

(05)



காலைக்கதிர் Kalaikkathir





# கடன் வழங்கிய சகலரையும் சமமாக நடத்தவேண்டுமாம்

## அமெரிக்கா ’அட்வைஸ்

கடன் வழங்கிய அனைவரையும் இலங்கை சமமாக நடத்தவேண்டும் என இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் ஜூலி சங் வலியுறுத்தியுள்ளார்.

இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் நந்தலால் வீரசங்கவுடன் இடம்பெற்ற சந்திப்பின் போதே தான் இதனைத் தெரிவித்ததாக அமெரிக்க தூதுவர் தனது டுவிட்டர் பதிவில் தெரிவித்துள்ளார்.

ஊழியர் மட்ட உடன்படிக்கையை எட்டியதன் மூலம், சர்வதேச நாணய நிதியத்தின் இரண்டாம் தவணையைப் பெறுவதற்கான முயற்சியில் முன்னேற்றம் கண்டுள்ளமைக்கு அவர் வாழ்த்தும் தெரிவித்துள்ளார்.

கடன் மறுசீரமைப்பு செயற்பாட்டின் போது சம்பந்தப்பட்ட ஒவ்வொரு தரப்பினரிடமிருந்தும் வெளிப்படைத்தன்மை அவசியம் என்றும் அமெரிக்கத் தூதர் கூறியுள்ளார்.

இலங்கையில் ஸ்திரத்தன்மை மற்றும் வளர்ச்சியை உறுதிசெய்து, நியாயம், வெளிப்படைதன்மை, ஒருமைப்பாடு ஆகியவற்றை மதிக்கும் ஒரு பொருளாதார சூழல் குறித்து அமெரிக்கா உறுதியுடன் இருப்பதாகவும் அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங் தெரிவித்துள்ளார். (05)

# இளம் குடும்பஸ்தர் அடித்துக் கொலை

## வட்டக்கச்சியில் சம்பவம்

கிளிநொச்சி, வட்டக்கச்சி பகுதியில் புதன்கிழமை இரவு இளம் குடும்பஸ்தரொருவர் மர்ம நபர்களால் அடித்துக் கொலைசெய்யப்பட்ட சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

கல்மடுநகர் - சம்புக்குளம் பகுதியைச் சேர்ந்த 23 வயதான நபரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இந்நிலையில் குறித்த நபர் கட்டையால் தாக்கப்பட்டு உயிரிழந்திருக்கலாம் எனத் தெரிவித்துள்ள பொலிஸார் இது குறித்த மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (05)

# வடக்குப் பாடசாலைகளின் கீதங்கள் தமிழ் மொழியில் அமைய வேண்டும்

## அமைச்சர் டக்ளஸ் வலியுறுத்தல்

மாணவர்கள் இலகுவாகப் புரிந்து கொண்டு பின்பற்றக்கூடிய வகையில் பாடசாலை கீதங்கள் மாற்றப்பட வேண்டும் என்று வலியுறுத்திய அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, யாழ். மத்திய கல்லூரியின் கீதம் தமிழ் மொழிக்கு மாற்றப்படுவதுடன் ஏனைய தமிழ் மொழி மூல பாடசாலைகளுக்கு முன்னுதாரணமாக அமைய வேண்டும் என்பதே தன்னுடைய எதிர்பார்ப்பாக இருப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

யாழ். மத்திய கல்லூரியில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள திறன் (ஸ்மார்ட்) வகுப்பறையை ஆரம்பித்து வைத்து உரையாற்றும்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

குறித்த கல்லூரியின் பழைய மாணவனான அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, கல்வி கற்ற காலத்தில் அர்த்தம் புரிந்துகொள்ளாமல் கல்லூரிக் கீதத்தை மனனம் செய்து பாடியதாகத் தெரிவித்ததுடன், கீதத்தின் அர்த்தத்தைப் புரிந்துகொள்கின்ற போதே, உணர்வு ரீதியான பிணைப்பையும் அர்ப்பணிப்பு மனப்பக்குவத்தையும் மாணவர்கள் பெற்றுக் கொள்வார்கள் எனவும் தெரிவித்தார். (05)

# ஊழலிலீடுபட்ட சுகாதார அமைச்சு அதிகாரிகளுக்கு எதிராக அமைச்சர் ரமேஷ் பத்திரண நடவடிக்கை எடுக்க வேண்டும்

## காவிந்த ஜயவர்தன வலியுறுத்தல்

முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெலவுடன் இணைந்து ஊழல், மோசடிகளில் ஈடுபட்ட அதிகாரிகளுக்கு எதிராகத் தற்போதைய அமைச்சர் ரமேஷ் பத்திரண சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் காவிந்த ஜயவர்தன வலியுறுத்தினார்.

கொழும்பிலுள்ள எதிர்க்கட்சி தலைவர் அலுவலகத்தில் வியாழக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் இதனை வலியுறுத்திய அவர் மேலும் குறிப்பிடுகையில் -

முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்லவுக்கு எதிராக எம்மால் நாடாளுமன்றத் தில் முன்வைக்கப்பட்ட நம்பிக்கையில்லா பிரேரணை தோற்கடிக்கப்பட்டிருந்தாலும், அன்று அதில் நாம் குறிப்பிட்ட காரணிகள் உண்மை என்பது தற்போது நிரூபனமாகியுள்ளது. அது மாத்திரம் போதாது. எம்மால் முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டுக்களுடன் தொடர்புடைய அதிகாரிகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

அமைச்சர் மாற்றப்பட்டுள்ள போதிலும், அவருடன் இணைந்து ஊழல், மோசடிகளில் ஈடுபட்டுள்ள அதிகாரிகள் எவரும் மாற்றப்படவில்லை. இவர்களுக்கு எதிராக எவ்வாறு சட்ட நடவடிக்கை எடுக்கப் போகிறீர்கள் என்று தற்போதைய சுகாதார அமைச்சர் ரமேஷ் பத்திரணவிடம் கேள்வியெழுப்புகின்றோம். அப்பாவி மக்களின் வரிப்பணமே இவர்களால் மோசடி செய்யப்பட்டுள்ளது. நாட்டில் 65 ஆயிரத்துக்கும் அதிகமான சிறுவர்கள் மந்த போசனையால் பாதிக்கப்பட்டுள்ளனர் எனத் தகவல்கள் கிடைத்துள்ளன. இவை தொடர்பில் தற்போதைய சுகாதார அமைச்சர் அவதானம் செலுத்த வேண்டும். - என்றார். (05)




# பாடசாலை சேவை வாகனங்கள் மீதான கட்டுப்பாடு இறுக்குகிறது

பாடசாலை மாணவர்களை ஏற்றிச் செல்லும் பழுதடைந்த பஸ்கள் மற்றும் வான்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

போக்குவரத்துப் பிரிவுக்கு பொறுப்பான சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் மனோஜ் ரணகல, ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பயணிகள் போக்குவரத்தில் இருந்து நீக்கப்பட்ட பல பஸ்கள் மற்றும் வான்கள் பாடாசாலை சேவையில் ஈடுபடுவது கண்டறியப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (05)

# யாழ். போதனா வைத்தியசாலைக்கு உதவிக் கரம் நீட்டிய தொழிலதிபர்



புதிதாகப் பிறந்த சிசுக்களிற்கான அதி திவிர சிகிச்சை பிரிவிற்கு 12.5 மில்லியன் ரூபா பெறுமதியான பிறந்த குழந்தைகளின் காற்றோட்டம் (அதிக அதிர்வெண்) இயந்திரத்தினை தொழிலதிபர் எஸ்.கே.நாதன் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு அன்பளிப்புச் செய்துள்ளார்.

இந்த நிகழ்வில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் த.சத்தியமூர்த்தி உள்ளிட்ட வைத்தியர்கள், தாதியர்கள், வைத்தியசாலை உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்து கொண்;டனர்.(05)

# நாட்டில் தேரர்களுக்கு மட்டும் தனிச் சட்டமா?

## மனோ கணேசன் காட்டம்



அம்பிட்டிய சுமனரத்தின தேரரை ஐ.சி.சி.பி. ஆர் சட்டத்தின் கீழ் கைது செய்து சிறையில் அடைக்க வேண்டும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் ஊடகங்களுக்கு வெளியிட்டுள்ள விசேட காணொலிப் பதிவிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் -

சுமனரத்தின தேரரை உடனடியாகக் கைது செய்ய வேண்டும். அவருக்கு முதலில் என்ன பிரச்சினை என்பதைக் கண்டறிய வேண்டும். மன நோயாளி போல் தமிழர்களை வெட்டுவேன் எனப் பகிரங்கமாகக் கூறுகின்றார்.

விசேடமாகப் பௌத்தர்கள் புனித போயா தினத்தை அனுஷ்டிக்கும் இந்த வேளையில் அவர் அவ்வாறு கூறுவதை ஏற்றுக்கொள்ள முடியாது.

குறிப்பாக அவர் தெரிவிக்கும் அந்த மயான பூமி தொடர்பாக அவர் சம்பந்தப்பட்ட துறையினரிடமோ அல்லது பொலிஸாரிடமோ முறையிட்டு இருக்கலாம். ஆனால் அவர் அவ்வாறு நடந்து கொள்ளவில்லை.

நடைமுறையிலுள்ள ஐ.சி.சி.பி. ஆர் சட்டத்தின் கீழ் உடனடியாக அந்த தேரர் கைது செய்யப்பட வேண்டும். ஏனெனில் குறித்த சட்டத்தின் கீழ் ஏற்கனவே சில மதத் தலைவர்கள் கைது செய்யப்பட்ட சம்பவங்களும் இருக்கின்றன.

அவ்வாறு அம்பிட்டிய சுமனரத்தின தேரரை கைது செய்யாவிட்டால் அவர் மீண்டும் மீண்டும் அவ்வாறு தான் நடந்து கொள்வார். இதற்கு உடனடியாகவே நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். நாட்டில் சட்டம் அனைவருக்கும் சமமாக இருக்க வேண்டும். - என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (05)

# சந்திக்க வந்த பெண்ணை வீட்டொன்றிற்குள் அழைத்துசென்று கொள்ளையிட்ட குழுவினர்

ஹொரணை பிரதேசத்தில் கடந்த 21ஆம் திகதி விளையாட்டரங்கில் நடைபெற்ற கண்காட்சி நிகழ்ச்சியின் போது தன்னை சந்திக்க வந்த பெண் ஒருவரை தனது நண்பர்களுடன் வீட்டொன்றிற்குள் அழைத்துச் சென்று ஏராளமான பொருள்களைக் கொள்ளையடித்து சென்றுள்ளார்.

இவ்வாறு கொள்ளையிட்டவர் விற்பனை ஊக்குவிப்பு அதிகாரியாகக் கடமையாற்றும் இளைஞன் ஒருவரே. பாதிக்கப்பட்ட பெண் குருநாகல் பிரதேசத்தின் அலகொலதெனிய பகுதியை சேர்ந்தவர் ஆவார்.

இவர் ஒரு மாதத்திற்கு முன்னர் ஹொரணை பிரதேசத்தின் நிறுவனமொன்றில் விற்பனை ஊக்குவிப்பு உத்தியோகத்தராகக் கடமையாற்றியுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இவரிடமிருந்து இரண்டு பவுன் தங்க நகைகள், கையடக்கத்தொலைபேசி, மோட்டார்சைக்கிள் மற்றும் பணப்பை ஆகியவை கொள்ளையடிக்கப்பட்டுள்ளன.

இந்த சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

(05)

## கைத்தொழில்....

(இரண்டாம்பக்கத்தொடர்ச்சி)

உட்பட அனைவரும் எமது நாட்டின் உற்பத்திகளை அதிகரிக்க தம்மால் இயலுமான அளவில் அர்ப்பணிப்புடன் செயற்பட்டார்கள். அவர்களுக்கு எமது நன்றியைத் தெரிவிக்க வேண்டும்.

குறிப்பாக எமது நாட்டில் இறக்குமதிக் கட்டுப்பாடுகள் அமுலில் இருந்த காலத்தில், தேசிய உற்பத்திகளை அதிகரிக்கவும் அதேபோன்று ஏற்றுமதியை உயர்த்தவும் நமது நாட்டு தொழில் முயற்சியாளர்கள் தமது பங்களிப்புகளைச் செய்துள்ளனர். இதன்மூலம் 2022 ஆம் ஆண்டு நமது நாட்டின் வரலாற்றில் அதிக ஏற்றுமதி வருமானமாக 13.1 பில்லியன் அமெரிக்க டொலர்களைப் பெற்றுக்கொள்ளும் வாய்ப்புக் கிடைத்தது.

இலங்கையில் கைத்தொழில்துறைக்கென்று ஒதுக்கப்பட்டுள்ள நிலத்தின் அளவு மிகவும் குறைவாகவே உள்ளது. இதன் காரணமாக எமது நாட்டு கைத்தொழில்துறை போதியளவு முன்னேற்றம் அடையவில்லை. இதனை அதிகரிக்க தற்போது நடவடிக்கை எடுத்து வருகின்றோம். நாட்டின் மொத்த நிலப் பரப்பில் ஒருசதவீத சதவீதத்தையேனும் கைத்தொழில்துறைக்கு ஒதுக்க வேண்டும் என்பதே எமது இலக்காகும்.

நாம் ஏற்கனவே 03 புதிய கைத்தொழில் பேட்டைகளை உருவாக்க நடவடிக்கை எடுத்துள்ளோம். களுத்துறை மாவட்டத்தின் மில்லெனிய, காலி மாவட்டத்தின் எல்பிடிய, கண்டி மாவட்டத்தின் பொத்தபிடிய ஆகிய கைத்தொழில் பேட்டைகளை ஆரம்பித்துள்ளோம்.

கைத்தொழில் துறையின் மேம்பாட்டுக்கு நிதி ரீதியிலான ஒத்துழைப்புகளை வழங்கக் கூடிய வகையில் போதிய நிதி நிறுவனங்கள் எமது நாட்டில் இல்லாமை ஒரு பாரிய குறைபாடாக உள்ளது. எனவே அதனை நிவர்த்தி செய்ய கைத்தொழில் அபிவிருத்தி சபை ஊடாக பல்வேறு கடன்திட்டங்களைச் செயற்படுத்தி வருகின்றோம்.

அதேபோன்று, எமது நாட்டு கைத்தொழில் துறையினர் எதிர்கொள்ளும் மற்றுமொரு பிரச்சினைதான் கைத்தொழில்களை ஆரம்பிப்பதற்கு அனுமதி பெற்றுக்கொள்வது தொடர்பில் உள்ள சிக்கலான நிலைமை. பல்வேறு அரச நிறுவனங்களுக்குச் சென்று அதிகளவிலான ஆவணங்களைச் சமர்ப்பிக்க வேண்டியுள்ளதுடன் அதிக காலத்தை இதற்காக செலவிட வேண்டிய நிலைமையும் காணப்படுகின்றது.

இது புதிய தொழில் முயற்சியாளர்களை விரக்தி அடையச் செய்கின்றது. எனவே எமது நாட்டின் கைத்தொழில் துறையை மேம்படுத்துவதற்காகவும் அவர்களை ஊக்குவிப்பதற்காகவும் அனுமதி பெறல் தொடர்பான விடயத்தை இலகுபடுத்த அவசியமான பணிகளை முன்னெடுக்கவும் திட்டமிட்டுள்ளோம்.

இலங்கையின் கைத்தொழில் துறை அபிவிருத்திக்கான தேசிய கொள்கை தயாரிக்கப்பட்டு அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இலங்கையின் தேசிய கொள்கை கட்டமைப்பில் (2023-2048) இணைத்துக்கொள்ள பொருளாதார ஸ்திரப்படுத்தல் புத்தெழுச்சி மற்றும் அபிவிருத்தி மேம்பாட்டுக்கான குழு தீர்மானித்துள்ளது. கைத்தொழில் கொள்கை தொடர்பான ஐந்தாண்டு மூலோபாயத் திட்டமும் தயாரிக்கப்பட்டுள்ளதுடன், அமைச்சு அதனைச் செயல்படுத்தத் தொடங்கியுள்ளது.

மேலும், இனங்காணப்பட்டுள்ள பல்வேறு மூலப்பொருட்களுக்கு வரிவிலக்களிக்கவும் திட்டமிட்டு வருகின்றோம். அத்துடன் எமது நாட்டு தொழில் முயற்சியாளர்களை ஊக்குவிக்கும் வகையில் கைத்தொழில துறை கண்காட்சிகளைப் பல்வேறு பிரதேசங்களில் நடத்தி வருகின்றோம். இதன்மூலம் அவர்களுக்கு உள்நாட்டு மாத்திரமன்றி சர்வதேச சந்தை வாய்ப்புகளைப் பெற்றுக்கொள்ளும் சந்தர்ப்பமும் ஏற்பட்டுள்ளது.

அதேபோன்று, கடந்த வருடம் இலத்திரனியல் கருவிகள், இரத்தினக்கல் மற்றும் ஆபரணங்கள் ஏற்றுமதியிலும் குறிப்பிடத்தக்களவு வருமானத்தை பெற்றுக்கொண்டுள்ளோம். மேலும் அச்சு மற்றும் பொதியிடல் உட்பட மருந்து உற்பத்தி மற்றும் குளியலறை சாதன உற்பத்திகளும் அதன் ஏற்றுமதியும் அதிகரித்துள்ளன என்றார்.



காலைக்கதிர் Kalaikkathir

# ஐக்கிய தேசிய கட்சியை நிர்வகிப்பதை போன்று வெளியுறவுக் கொள்கையைக் கையாளமுடியாது

## சஜித் போட்டுத் தாக்கு



தற்போதைய அரசாங்கத்தின் இராஜதந்திர முன்னெடுப்புகள் பலவீனமானவை என்றும், ஜனாதிபதி தலைமையிலான அமைச்சரவை பிரதிநிதிகள் நாடு முழுவதும் சுற்றுப்பயணம் செய்து, ஒவ்வொரு நாட்டுக்கும் பொருந்தாத கதைகளையும் பொய்களையும் கூறுவதால் பெரும்பாலான நாடுகள் எம்மீது கோபமடைந்துள்ளன என எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைப் பதவியைப் பாதுகாத்துக் கொள்ள ஒருவரையொருவர் பொய் சொல்வதால் கட்சி பூஜ்ஜிய நிலைக்கு படுதோல்வியடைந்ததாகவும், ஐக்கிய தேசியக் கட்சியை நிர்வகிக்கும் விதத்தில் நாட்டின் வெளியுறவுக் கொள்கையை நிர்வகிக்க முடியாது என்றும், உலகம் பூராகவும் சென்று ஒன்றுக்கொன்று முரண்பாடான கருத்துக்களை உலகிற்கு எடுத்துரைப்பதன் மூலம் வெற்றிகரமான வெளிநாட்டுக் கொள்கையை நடைமுறைப்படுத்த முடியாது என்றும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

பிரபஞ்சம் திட்டத்தின் கீழ், 39 ஆவது கட்டமாக அத்தனகல்ல உந்துகொட அறபா கல்லூரிக்கு ஸ்மார்ட் வகுப்பறைகளுக்கான உபகரணங்களை வழங்கி வைக்கும் நிகழ்வில் வியாழக்கிழமை கலந்து கொண்டு உரையாற்றும் போதே எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச மேற்கண்டவாறு தெரிவித்தார்.

சீனக் கப்பல் தொடர்பில் கூட தற்போதைய அரசாங்கம் பல்வேறு கதைகளைக் கூறியுள்ளதாகவும், இந்தியாவிடம் வர விட மாட்டோம் என கூறி மறுபக்கம் சீனாவிடம் வாருங்கள் எனக் கூறியுள்ளனர் என்றும், நொடிக்கு நொடி மாறி மாறி கதைப்பதால் நாட்டுக்கு முக்கியமான பல சர்வதேச நாடுகள் நம் மீது கோபம் கொண்டுள்ளன என்றும், இவ்வாறான அரசாங்கத்தையோ அல்லது வெளிநாட்டுக் கொள்கையையோ நடைமுறைப்படுத்த முடியாது எனவும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சிக்கு பொய் சொன்னது போல் சர்வதேச சமூகத்திடம் பொய் சொல்ல முடியாது என்றும், சீன கப்பல் விவகாரத்தை முழுவதுமாக குழப்பியதற்காக பல நாடுகள் நம் மீது கோபத்தில் உள்ளன என்றும், ஐக்கிய தேசியக் கட்சியால் முடியாது போனாலும், ஐக்கிய மக்கள் சக்தி வெற்றிகரமான வெளிநாட்டுக் கொள்கையைக் கொண்டுள்ளது என்றும், கோள் சொல்லித் திரியும் அரசியல் மூலம் இந்த வெளியுறவுக் கொள்கையைத் திறம்பட நடைமுறைப்படுத்த முடியாது என்றும், எமது நாட்டில் ஆட்சியிலுள்ள பலவீனமான அரசாங்கத்தின் செயற்பாடுகள் காரணமாக எமது நாட்டு மக்கள் மீதும், நாட்டு மக்கள் மீதும் கோபம் கொள்ள வேண்டாம் என சர்வதேசத்திடம் கோரிக்கை விடுப்பதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

நாட்டை அழித்து, நாட்டையே வங்குரோத்தாக்கியது போலவே தமது பாதுகாப்புக்காக ஜனாதிபதியொருவரை நியமித்த அரச குடும்பத்தின் அரச குமாரர் ஒருவர் ஜனாதிபதி மீது கோபத்தில் உள்ளார் என்றும், சுகாதார அமைச்சரின் மாற்றத்தால் இவ்வாறு வருத்தம் அடைந்துள்ளனர் என்றும், இவ்வாறு கோபப்படும் அரச குடும்பம், சுகாதார அமைச்சர் மீதான நம்பிக்கையில்லாத் தீர்மான வாக்கெடுப்பின் போது கூட, நாடு குறித்து சிந்திக்காமல் தம்மைப் பற்றி சிந்தித்தே செயற்பட்டதாக எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

இவர்கள் எவ்வாறு ஒன்றிணைந்து நாட்டை அதலபாதாளத்திற்கு இட்டுச் சென்றார்கள் என்பது முழு நாட்டுக்கும் தெரியும் என்றும், இவர்கள் இப்போது முதலைக் கண்ணீர் வடித்து, வரவு செலவுத் திட்டத்தில் ஜனாதிபதிக்கு ஆதரவாக வாக்களிப்பார்கள் என்றும், முடியுமானால் வரவு செலவுத் திட்டத்திற்கு எதிராக வாக்களித்துக் காட்டுமாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேம தாஸ சவால் விடுத்தார்.

உண்மையைப் பேச தாம் பயப்படாதால், எமது நாட்டில் கல்வி ஆங்கில மொழியில் இருக்க வேண்டும் என்று கூறுவதற்கு ஏனையவர்களைப் போன்று பயப்படவில்லை என்றும், வங்கு ரோத்து நாட்டில் இந்தத் தருணத்தில் இருந்தேனும் உலகை வெல்லும் பிரஜைகளை உருவாக்கும் பயணத்தை ஆரம்பிக்க வேண்டும் என்றும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

ஸ்மார்ட் நாடு குறித்து ஒவ்வொரு கணமும் தாம் பேசும் பேச்சுக்களை பின்பற்றி, தனது ஸ்மார்ட் கட்சியாலையே ஸ்மார்ட் நாட்டைக் கட்டியெழுப்ப முடியும் என ஜனாதிபதி கூறுவது பாசாங்குத்தனமான செயலாகும் என்றும், ஸ்மார்ட் நாட்டைக் கட்டியெழுப்ப, ஸ்மார்ட் ரீதியான கல்வி முறை, ஸ்மார்ட் மாணவர்கள், ஸ்மார்ட் இளைஞர்கள் மற்றும் ஸ்மார்ட் குடிமக்கள் இருக்க வேண்டும் என்றும், நாடு ஸ்மார்ட் ஆக வேண்டுமானால், மூலோபாய ரீதியில் மாற்றம் நிகழ வேண்டுமானால், 10126 அரச பாடசாலைகளும் ஸ்மார்ட் பாடசாலைகளாக மாற வேண்டும் என்றும், அரசாங்கத்தால் முடியாத அந்தப் பொறுப்பைத் தாம் ஏற்றுக் கொள்வதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சக்தியால் அமுல்படுத்தப்படும் மூச்சுத் திட்டத்தின் கீழ் 56 அரச வைத்தியசாலைகளுக்கு 171,966,900.00 ரூபா பெறுமதியான வைத்தியசாலை உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன.

பிரபஞ்சம் பஸ் திட்டத்தின் கீழ் 80 அரச பாடசாலைகளுக்கு 50 லட்சம் ரூபா பெறுமதியான 80 பாடசாலை பஸ்கள் வழங்கப்பட்டுள்ளதோடு 389,200,000.00 ரூபா இதற்காக செலவிடப்பட்டுள்ளது.

பிரபஞ்சம் ஸ்மார்ட் வகுப்பறைகள் திட்டத்தின் கீழ் 39 அரச பாடசாலைகளுக்கு 353 லட்சம் ரூபா பெறுமதியான ஸ்மார்ட் வகுப்பறை உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன. - என்றார். (05)

# ஐக்கிய நாடுகள் சிறுவர் நிதிய பிராந்திய பணிப்பாளர் சஞ்சய் விஜேசேகரவுடன் சஜித் பிரேமதாஸ சந்திப்பு

எமது நாட்டின் சுகாதாரம் மற்றும் கல்வித் துறைகளின் தற்போதைய பிரச்சினைகள் மற்றும் அதன் எதிர்காலம் தொடர்பில் கலந்துரையாடுவதற்கான புரிந்துணர்வு சார் சந்திப்பொன்று எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் இடம்பெற்றதோடு, இதில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ மற்றும் ஐக்கிய நாடுகளின் சிறுவர் நிதியத்தின் பிராந்திய பணிப்பாளர் சஞ்சய் விஜேசேகர ஆகியோர் கலந்து கொண்டனர்.

ஐக்கிய நாடுகளின் சர்வதேச சிறுவர் நிதியத்தின் இலங்கைக்கான பிரதிநிதி கிறிஸ்டியன் ஸ்கூக் அவர்களும் இந்தச் சந்திப்பில் பங்கேற்றிருந்தார்.

ஐக்கிய நாடுகளின் சர்வதேச சிறுவர் நிதியம், ஐக்கிய நாடுகள் சனத் தொகை நிதியம் மற்றும் உணவு விவசாய ஸ்தாபனம் என்பவற்றுடன் இணைந்து இலங்கையின் சுகாதாரம் மற்றும் கல்வித் துறைகளுக்கு ஐக்கிய மக்கள் சக்தியால் எவ்வாறு செயலூக்கமாக பங்களிக்க முடியும் என்பது குறித்து எதிர்க்கட்சித் தலைவர் இங்கு கருத்துத் தெரிவித்தார்.

எமது நாட்டின் சுகாதாரம் மற்றும் கல்வி முறைமைகளை மேம்படுத்தும் வகையில் யுனிசெப் அமைப்பு கூடிய ஒத்துழைப்பை வழங்குமாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ யுனிசெப் பிரதிநிதிகளிடம் கடுமையாகக் கோரிக்கை விடுத்தார்.

இந்தக் கலந்துரையாடலில், இலங்கை குடும்பங்கள் எதிர்கொள்ளும் ஊட்டச்சத்துச் சவால்கள், எமது நோய் தடுப்பு மற்றும் குணப்படுத்தும் சிகிச்சைகள், சுகாதாரத் துறையில் நிலவும் பிரச்சினைகள் குறித்து இரு தரப்பினரும் அவதானம் செலுத்தினர். இந்த விடயங்களில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ கொண்டிருக்கும் ஆழ்ந்த அறிவைப் பாராட்டிய யுனிசெப்பின் பிராந்திய பணிப்பாளர், ஒத்துழைப்பின் முக்கியத்துவம் குறித்தும் சுட்டிக்காட்டினார். (05)

# அதிக போதை பாவனையால் உடுவிலில் ஆண் உயிரிழப்பு

சுன்னாகம் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட உடுவில் பகுதியில் அதிக போதைவஸ்து பாவனையால் ஆணொருவர் உயிரிழந்துள்ளார். உடுவில் பகுதியைச் சேர்ந்த விஜயராசா நிரஞ்சன் (வயது 34) என்ற நபரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் குறித்து மேலும் தெரியவருகையில் -

குறித்த நபரின் சகோதரர்கள் வெளிநாட்டில் வசித்து வரும் நிலையில் இவர் தனது தாயாருடன் உடுவில் பகுதியில் வசித்து வந்துள்ளார்.

இந்நிலையில் அவர் வியாழக்கிழமை காலை கழிப்பறைக்கு சென்று விட்டு நீண்ட நேரம் திரும்பி வரவில்லை. இந்நிலையில் தாயார் கதவைத் திறக்க முற்பட்டபோது அது திறபடவில்லை. இந்நிலையில் தாயார் கதவை உடைத்து உள்ளே சென்று பார்த்தவேளை அவர் இறந்த நிலையில் காணப்பட்டார். அவரது சடலம் மீது மேற்கொள்ளப்பட்ட பிரேத பரிசோதனைகளின்படி அதிக போதைப்பொருள் பாவனை காரணமாக குறித்த மரணம் சம்பவித்துள்ளதாகத் தெரியவருகிறது. அவரது வீட்டிலும் போதைப்பொருள் ஏற்றும் ஊசி உள்ளிட்ட பொருள்கள் காணப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. (05)

# முக்கிய தீவுகளில் சுற்றுலாத்துறைசார் முதலீட்டுக்கு இலங்கை அரசு தீர்மானம்

இலங்கையிலுள்ள முக்கிய தீவுகளில் சுற்றலாத்துறை மேம்பாட்டுக்கான தேசிய மற்றும் சர்வதேச முதலீட்டாளர்களுக்கு வழங்குவது தொடர்பில் அரசாங்கம் அவதானம் செலுத்தியுள்ளதாக நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு இராஜாங்க அமைச்சர் அருந்திக பெர்னாண்டோ தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில் -

இலங்கையில் பல அழகிய தீவுகள் மீன் பிடி நடடிக்கைகளுக்காக மாத்திரம் பயன்படுத்தப்பட்டுக் கொண்டிருக்கின்றன. சில தீவுகளில் பருவ காலங்களில் மாத்திரமே மீன்பிடி நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன. எனவே, அவ்வாறான தீவுகள் ஊடாக வருமானத்தைப் பெறுவது தொடர்பில் அவதானம் செலுத்தப்பட்டுள்ளது.

அதற்கமைய அவற்றை விற்காமல் குத்தகைக்கு வழங்கல் போன்றவற்றுக்கு பயன்படுத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதற்கமைய இவற்றில் தேசிய மற்றும் வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு முதலீட்டு வாய்ப்புக்களை வழங்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபையைப் போன்று தீவுகள் அபிவிருத்தி அதிகாரசபையொன்றை நிறுவி இந்த வேலைத்திட்டங்களை முன்னெடுப்பது தொடர்பில் யோசனை முன்வைக்கப்பட்டது.

எவ்வாறிருப்பினும் பாரியளவு செலவின்றி அந்த வேலைத்திட்டங்களை முன்னெடுக்குமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஆலோசனை வழங்கியுள்ளார்.

அதற்கமைய கடற்சூழல் பாதுகாப்பு அதிகாரசபையிடம் இந்தப் பொறுப்புக்கள் ஒப்படைக்கப்பட்டுள்ளன. அவற்றின் ஊடாக முதலீட்டு வாய்ப்புக்கள் வழங்கப்படக் கூடிய தீவுகள் தெரிவு செய்யப்படும். - என்றார். (05)

# தடைசெய்யப்பட்ட மீன்பிடி வலைகளுடன் ஒருவர் கைது

## யாழ்ப்பாணத்தில் சம்பவம்

யாழ்ப்பாணத்தில் 140 கிலோ எடையுள்ள தடைசெய்யப்பட்ட மீன்பிடிவலைகள் மீட்கப்பட்டுள்ளன. யாழ்ப்பாணம் கடற்றொழில் மற்றும் நீரியல் வளத் திணைக்கள அதிகாரிகளுக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் யாழ்.நகர் பகுதியில் உள்ள கடை ஒன்றில் இருந்தே தடை செய்யப்பட்ட 140 கிலோ எடையுள்ள வலை மீட்கப்பட்டது.

வலை மீட்கப்பட்டதை அடுத்து, தடை செய்யப்பட்ட வலைகளை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் கடையின் உரிமையாளர் கைது செய்யப்பட்டார்.

மேலதிக விசாரணைகளின் பின்னர், மீட்கப்பட்ட வலைகளையும், கைது செய்யப்பட்ட நபரையும் நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளனர். (05)

# சார்ஜன்டை தாக்கி காயப்படுத்திய இராணுவச் சிப்பாய் கைதானார்

மொனராகலை, தம்பகல்ல பிரதேசத்தில் பொலிஸ் சார்ஜன்ட் ஒருவரைத் தாக்கி காயப்படுத்திய இராணுவ சிப்பாய் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என தம்பகல்ல பொலிஸார் தெரிவித்தனர். சந்தேக நபரான இராணுவ சிப்பாய் அநுராதபுரம் சாலியபுர முகாமில் கடமையாற்றுபவர் எனப் பொலிஸார் தெரிவித்தனர். கிணற்றில் பொருத்தப்பட்டிருந்த தண்ணீர் மோட்டரை சேதப்படுத்திய சம்பவம் தொடர்பில், வாக்குவாதம் முற்றியதையடுத்து இந்தத் தாக்குதல் இடம்பெற்றுள்ளதாகப் பொலிஸாருக்கு முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன. (05)

# பிரான்ஸில் குடு அஞ்சு விடுதலை கல்கிஸையில் நால்வர் கைது

பிரான்ஸில் கைது செய்யப்பட்ட இலங்கையின் பாதாள உலகக் குழு நபரான 'குடு அஞ்சு' என அழைக்கப்படும் சின்ஹாரகே சமிந்த சில்வா, பிரான்ஸ் நீதிமன்றத்தால் விடுவிக்கப் பட்டுள்ளார்.

இந்நிலையில் குடுஅஞ்சுவின் விடுதலையை பட்டாசு வெடித்து, மது விருந்தை ஏற்பாடு செய்து கொண்டாடிய கல்கிஸ்ஸை பகுதியைச் சேர்ந்த நால்வரைப் பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

தெஹிவளை - கல்கிசை மாநகர சபை உறுப்பினர் ரஞ்சன் டி சில்வாவின் கொலை, போதைப்பொருள் கடத்தல் உள்ளிட்ட பல்வேறு குற்றங்களில் தேடப்பட்டுவந்த குடு அஞ்சு, கடந்த ஏப்ரல் மாதம் பிரான்ஸில் கைது செய்யப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது. (05)

# முன்னாள் இராணுவத் தளபதி லயனல் பலகல்ல காலமானார்

இலங்கையின் 16 ஆவது இராணுவத் தளபதியான ஜெனரல் (ஓய்வு) லயனல் பலகல்ல வியாழக்கிழமை காலமானார்.

கொழும்பிலுள்ள இராணுவ வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில், தனது 75 ஆவது வயதில் அவர் காலமானார்.

அவரது இறுதிச் சடங்குகள் குறித்து பின்னர் அறிவிக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (05)


JRIDE
BEYOND THE ROAD
ஜே ரைட்
ஒன்லைன் ரக்சி அப்
ONLINE TAXI APP FROM JAFFNA
ஆட்டோ கட்டணங்களால் ஆடிப்போயுள்ளீர்களா? கவலையினை விடுங்கள்.
நாங்கள் தயாராகிவிட்டோம்!
யாழ்ப்பாணத்தில் இருந்து உங்களுக்காக உருவாக்கப்பட்ட ரக்சி அப் (Taxi App)
உங்கள் பயணங்களை பாதுகாப்பானதாகவும் மகிழ்ச்சிகரமானதாகவும் செலவு குறைவாகவும் அமைத்துக்கொள்ளுங்கள்.
இப்போதே Play Store இல் இருந்து JRide - Beyond The Road App இனை இறக்கி உங்கள் தொலைபேசி இலக்கத்தை பயன்படுத்தி உங்கள் கணக்கை பதிவு செய்யலாம்!
YOU CAN EASILY REGISTER & BOOK YOUR RIDE
+94 21 222 8358
JRIDE TAXI SERVICE
SPEED IT NET
பரமேஸ்வரா சந்தி,
136, பலாலி வீதி
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்
+94 703 563213
www.jride.lk




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 28.10.2023இல் வெளியிடப்பெற்றது.